Registered as a news paper.    பக்கங்கள்: பன்னிரண்டு+II    விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 பங்குனி 27 ஹிஜ்ரி 1427 ற.அவ்வல் 12 (10.04.2006) திங்கட்கிழமை இதழ் 192






# கடல் பயண நிபந்தனையை புலிகள் அடியோடு நிராகரிப்பு

கிளிநொச்சி —

புலிகளின் கிழக்குத் தளபதிகள் கடற்படைப் படகிலேயே பயணிக்கவேண்டும் என இலங்கை அரசாங்கம் விதித்த நிபந்தனையை அடியோடு நிராகரித்துள்ள புலிகள் -

தமது சொந்தப் படகுகளில் பயணத்தைத் தொடர ஏற்பாடு செய்து தராவிடின், சுயபாதுகாப்புடன் பயணத்தைத் தொடரப்போவதாக எச்சரித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சனுக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

எமது கிழக்குப் பிராந்தியத் தளபதிகளது போக்குவரத்து நடைமுறை தொடர்பாக இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிவிப்பு - எமது தலைமைப்பீடத்தை மிகவும் ஆத்திரத்துக்கும், அதிர்ச்சிக்கும் உள்ளாக்கியுள்ளது.

நான்கு வருடங்களுக்கும் மேலாக மேற்கொள்ளப்பட்டுவந்த நடைமுறைகள், எமது யோசனைகள் அனைத்தை யும் நிராகரித்து, எவ்விதத்திலும் நடைமுறைக்குச் சாத்தியமற்ற - நல்லெண்ண முயற்சிகளைச் சிதறடிக்கும் அரசாங்கத்தின் போக்கானது எவ்விதத்திலும் அமைதி முயற்சிகளுக்கு ஊக்கமளிக்கும் என நாம் நம்பவில்லை.

அடுத்த கட்ட ஜெனிவா பேச்சுக்களுக்குச் செல்வதற்கு முன்னர் எமது தளபதிகள் - எமது தலைமைப்பீடத்துடன் கலந்துரையாட வேண்டிய அவசியமுள்ளது. இதனாலேயே நாம் எமது தளபதிகளுக்கான பயண ஒழுங்கினைச் செய்து தரும்படி கேட்டிருந்தோம்.

போர்நிறுத்தம் அமுலாக்கப்பட்டதிலிருந்து எமது தளபதிகள் திருகோணமலை மற்றும் மட்டக்களப்புக்குச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படைப் படகுகளிலேயே புலிகள் பயணிக்க வேண்டும்

### போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அரசு கடிதம்

கொழும்பு —

புலிகளின் கிழக்குத் தளபதிகள் கடற்படைப் படகுகளிலேயே பயணத்தை தொடரவேண்டுமென்று இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் பிரிகேடியர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சனுக்கு அரசாங்க சமாதானச் செயலகப்பணிப்பாளர் பாலித கோஹண கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில் - புலிகளின் கடற்பயணத்துக்கான வேண்டுகோள் தொடர்பாக அனுப்பிய கடிதம் சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சருடன் கலந்துரையாடினேன்.

விடுதலைப்புலிகளின் (12 ஆம் பக்கம் பார்க்க)

# நோர்வேயை வெளியேற்றினால் யுத்தத்துக்கே வழிவகுக்கும்!

### கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை



கொழும்பு —

இந்தப் பேட்டியில் அன்ரன் பாலசிங்கம்

## கொள்ளை சம்பவங்களை அனுமதிக்கவே முடியாது!

### யாழ்.மாவட்ட அரசியற்துறை தெரிவிப்பு

யாழ்ப்பாணம் —

குடாநாட்டு மக்களை உலுப்பி வரும் கொள்ளைச் சம்பவங்களை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்றும், எனவே இது பற்றிய தகவல்களை உடனுக்குடன் தமது கவனத்துக்கு கொண்டுவருமாறும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி. இளம்பரிதி வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை

கொழும்பு —


அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் நேரடிப் பேச்சுக்களை நடத்தமாட்டார்கள். எனவே ஜே.வி.பி கோருவது போல நோர்வேயை அனுசரணைப் பணியில் இருந்து அகற்றினால் நிச்சயமாக யுத்தத்துக்கே வழிவகுக்கும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

சண்டே லீடர் ஆங்கில வார இதழுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தப் பேட்டியில் அன்ரன் பாலசிங்கம் மேலும் தெரிவித்ததாவது -

நோர்வேயை வெளியேற்றக் கோரும் ஜே.வி.பி.யின் கோரிக்கையானது கேலிக்கூத்தான, நியாயமற்ற, சிறுபிள்ளைத்தனமான அரசியலை வெளிப்படுத்துகின்றது.

அரசாங்கத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியாக நேரடிப்பேச்சுக்களை நடத்தமாட்டார்கள். மூன்றாம் தரப்பினராகிய நோர்வே அரசாங்கத்தின் அனுசரணையுடன் தான் பேச்சுக்களை நடத்துவோம். (12 ஆம் பக்கம் பார்க்க)



இது பற்றிய தகவல்களை உடனுக்குடன் தமது கவனத்துக்கு கொண்டுவருமாறும் விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி வெளியிட்டிருக்கும் அறிக்கையில் -

யாழ்.குடாநாட்டு மக்களை உலுப்பி நிம்மதியற்ற ஒரு வாழ்வை மேற்கொள்ளும் அளவுக்கு அண்மைக் காலத்தில் இடம்பெற்று வரும் திருட்டு கொள்ளைச் சம்பவங்கள் காணப்பட்டு வருகின்றன.

எதிரிகளின் கொலைப் பயமுறுத்தல்களால் குடாநாட்டு மக்கள் இரவு நேரங்களில் வீட்டுக்கு வெளியே வர அஞ்சி வாழும் சூழலை தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட சில புல்லுருவிகளும், திருடர்களும் துப்பாக்கி, பொல்லுகள், வாள்கள், கத்திகள் கொண்டு மக்களை அச்சுறுத்தி திருட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஆம் கட்டப் பேச்சுத் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று!

கொழும்பு —

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை ஜெனிவாவில் நடைபெறவுள்ள பேச்சுக்கள் தொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு இன்று வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஜெனிவாவின் நியூயோனிலுள்ள லா பார்கரொல்லே விடுதியில் இரண்டாம் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளன.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை லா பார்கரொல்லேவில் இந்தப் பேச்சுக்கள் நடைபெறும். இதற்கான உத்தியோகபூர்வ இன்று வெளியாகக் கூடும் என எதிர்பார்க்கப்படு கிறது.

ஜெனிவா பேச்சுக்களுக்காக பல இடங்களை சுவிஸ் அரசாங்கம் பட்டியலிட்டு இறுதியாக பார்கரொல்லேவை தெரிவுசெய்துள்ளது. இந்தத் தெரிவு தற்போது இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ (12 ஆம் பக்கம் பார்க்க)

### மாமனிதர் விக்னேஸ்வரனுக்கு

# மூதூர் மற்றும் வவுனியாவில் பெருமளவானோர் அஞ்சலி!

திருகோணமலை —

மாமனிதர் விக்னேஸ்வரனின் புகழுடலுக்கு திருகோணமலை கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தமிழீழ தேசியக் கொடியை போர்த்தி இறுதிவணக்கம் செலுத்தினார்.

மாமனிதரின் புகழுடல் நேற்றுக் காலை தமிழீழ விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பகுதியிலுள்ள சம்பூருக்கு கொண்டுசெல்லப்பட்டது.

மாவட்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் எவோ ஜோன்சன் மற்றும் கண்காணிப்புக் குழுவின் ஏனைய மாவட்ட உறுப்பினர்களும் உடன்சென்றனர்.

சேனையூர் - நாவலடிச் சந்தியில் இருந்து சேனையூர் மத்திய கல்லூரிக்கு நேற்றுக் காலை 10.30 மணியளவில் தமிழீழ இராணுவ மரியாதையுடன் அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் இசை அணிவகுப்புடன் மாமனிதரின் புகழுடல் எடுத்துச்செல்லப்பட்டது.

மத்திய கல்லூரியில் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் புவன இரத்தினசிங்கம் தலைமையில் நினைவு (12 ஆம் பக்கம் பார்க்க)

மாபெரும் யாழ்.வர்த்தக கண்காட்சி - 2006
பண்டிகை காலத்தைக் கொண்டாடுங்கள்!
காலம்: ஏப்ரல் 8 முதல் 11 வரை இடம்: யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## மனையியல் கண்காட்சி நிகழ்விலிருந்து...





யாழ்ப்பாணம்

வடகிழக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட மாதர் அபிவிருத்தி நிலைய தையல் - மனையியல் கண்காட்சியும், விற்பனையும் யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தா.தியாகமூர்த்தி தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்கு நடைபெற்றது. இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் கலந்துகொண்டு கண்காட்சியும் விற்பனையையும் ஆரம்பித்து வைத்தார்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பேரின்பநாதன் கிராம அபிவிருத்தித் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.குமாரசிங்கம் மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டனர்.

## ஐஸ் கட்டிகளுக்கு பெரும் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்

யாழ்.குறநாட்டில் மீன்களைப் பதனிடும் ஐஸ் கட்டிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருவதால், மீன்களை தென்பகுதிக்கு ஏற்றுமதி செய்வதில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளனம் தெரிவித்துள்ளது. (த)

## நுழைவாயில் திறப்பு விழா

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 1991 ஆம் ஆண்டு உயர்தர பிரிவு மாணவர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட குமாரசாமி மண்டப நுழைவாயில் வளைவு திறப்புவிழா நாளை காலை 10.30 மணிக்கு கல்லூரி அதிபர் பி.கணேசராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - முதன்மை விருந்தினராக கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் பழைய மாணவன் செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன், பழைய மாணவர் சங்கத் தலைவர் க.பரமேஸ்வரன் முன்னாள் அதிபர் சுடர் மகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.



96 ஆவது பிறந்தநாள் வாழ்த்து

இன்று 96 ஆவது பிறந்தநாள் காணும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த

தில்லையம்பலம் திலகவதி (மாரிமுத்து)

இன்னும் பல ஆண்டுகள் நோய்நொடியின்றி வாழ வேண்டுமென குடும்பத்தினர் இறைவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

தகவல்
மகன் தி.நவரெத்தினம் (மெம்பர்)
உடுப்பிட்டி.

[C/5216]

## 18 ஆம் திகதிவரை விளக்கமறியல்!

யாழ்ப்பாணம்

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு யாழ்ப்பாணம் - மணல்தறை ஒழுங்கையிலுள்ள வீடு ஒன்றில் திருட முயற்சித்தவேளை அந்தப்பகுதி மக்களால் பிடிக்கப்பட்ட இருவரையும் பொலிஸார் நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் ஆஜர்படுத்திய வேளை இருவரையும் எதிர் வரும் 18 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.


Vacation @ AIMS
Career Development Program
Work as you like
Pc Applications
இக் கற்கை நெறி தனிமனிதர் சார்ந்த அல்லது அலுவலக தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய செய்முறையுடன் கூடிய கற்கை நெறியாக அமையும்
Handle as you like
Pc Maintenance
இக் கற்கை நெறியின் மூலம் உங்களது கணனிகளில் ஏற்படும் பிரச்சினைகளை நீங்களே திருத்திக் கொள்ள முடியும்
மட்டுப்படுத்தப்பட்ட பதிவுகள்
Start on : 15-04-06
Batch I : 9.00 am
Batch II : 4.00 pm
#118, பலாலி வீதி, தபாற்பெட்டிச் சந்தி திருநெல்வேலி
Center for FOSS & LAMP


DAIDO
CF 90C
4 Gear இன் சிறப்புகள்
எங்களிடம் தாராளமாக DAIDO, YAMATO, HONDA, YAMAHA, BAJAJ, SUZUKI மற்றும் எல்லா சீனா தயாரிப்புகளுக்குப் பொருந்தும் உதிரிப்பாகங்கள் வேண்டியளவு கிடைக்கும்
52,900.00
Koyo
ரேசர்கள்
DAIDO உதிரிப்பாகங்கள் YAMATO
60B, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு - 10.
E.mail: zme@slt.lk

ராஜா யாழ்ப்பாணம்
ஸ்ரீகாந், மீராஜஸ்மின், கருணாஸ் நடித்த

மெர்குரிப்பூக்கள்
பு. நேரம் : 10.30,2.30, 6.30,9.00

நாதவீஸ்
இன்று முதல் அர்ஜுன், மீனா, ஜோதிகா,மணிவண்ணன் நடித்த ரிதம்
14.04.06 புதுவருடத்தை முன்னிட்டு கள்வனின் காதலி
கா. நே : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரபு, முரளி, நவ்யா நாயர் நடித்த
பாசக் கிளிகள்
கா.நே:(பு.நே) 11.00, 2.45, 6.00

மனோகரா யாழ்ப்பாணம்
மாதவன், பூஜா, வடிவேல், மணிவண்ணன் நடித்த தம்பி
14 முதல் -
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின அதிரடி வெளியீடு
அஜித்குமார், சதா மற்றும் பலர் நடித்த

திருப்பதி
புத்தாண்டு தினத்தை முன்னிட்டு - காலை 7.30 இரவு 12.00 விசேட காட்சிகள்
கா.நே 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்

நமது ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்
நமது ஈழநாடு நடாத்தும் க.பொ.த. உயர்தரம் - 2006 பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கான
இலவச முன்னோடிக் கருத்தரங்கு
இடம் : யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, தம்பையா மண்டபம்.
காலம் : 11.04.2006 காலை 8.30 மணி தொடக்கம் 5.30 மணிவரை.
பாடங்கள் : கணக்கியல் - சாம்
பொருளியல் - இராஜேஸ்வரன்
வர்த்தகம் - பசில்
குறிப்பு : மாணவர்கள் மதிய உணவு கொண்டுவரவும்
அனுசரணை வழங்குபவர்கள்:
UNIT One Step Ahead 0773134737 / 0214590720

தேசத்தின் வங்கியாளர்
இலங்கை வங்கி
BOC

105, Arasady Road, Jaffna.
FOR ALL ENGLISH CLASSES
LONDON ENGLISH COLLEGE
- Diploma in English Duration : 3 Months
- IELTS Duration : 3 Months
- Spoken English Duration : 3 Months
- English Litterature (10, 11, 12, 13) Duration : Annul
- English for KIDS Duration : Annul
- Linguistics - GAQ, B.A

இதோ! புத்தம் புதிய கிரபிக்ஸ் வெளியீடுகள்!
Video Mixing க்குத் தேவையான Animation Title Backgrounds, DVD க்களில....
CICS Computer Technologies
# 87, Palaly Road, Thirunelvely, Jaffna.
Phone: 0777917610

Linux AIMS
#118, Palaly Road, Thirunelvely, Jaffna.
Center for FOSS & LAMP

STP Your Partner in IT Solution
73, Palaly Road, Jaffna.
Leading IT Institution in Jaffna

COMMERCIAL BANK
கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

## கண்காணிப்புக்குழு அறிக்கை தலைமையகத்துக்கு அனுப்பிவைப்பு

திருகோணமலை—

திருமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான அறிக்கையை திருகோணமலை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு கொழும்பிலுள்ள தலைமையகத்துக்கு விரிவான அறிக்கை ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

இந்தப் படுகொலை தொடர்பாக பலரிடம் விசாரணை நடத்திய கண்காணிப்புக்குழுவினர் சம்பவம் நடைபெற்ற இடத்தின் புகைப்படங்களையும் இணைத்து அறிக்கை தயாரித்து கொழும்புக்கு அனுப்பி வைத்துள்ளது.

தனது உயிருக்கு ஆபத்து இருப்பதாக கண்காணிப்புக்குழுவிடம் விக்னேஸ்வரன் பலமுறை முறைப்பாடு செய்திருந்தமையும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டதற்கு முதல்நாள் கடல் வலயத் தடைச்சட்டத்தை நீக்குவது தொடர்பாக கடற்தொழிலாளர்கள் அமைப்புடன் கண்காணிப்புக் குழுவினரைச் சந்தித்து நீண்டநேரம் விவாதித்திருந்தார்.

படுகொலைச் சம்பவம் நடந்த வங்கியின் பிரதான வாயிலிலிருந்து 15 மீற்றர் தொலைவில் விக்னேஸ்வரன் உடல் காணப்பட்டது. அவரது உடலில் இரு துப்பாக்கிச் சூடுகள் இருந்தன.

# ஜூலையில் பொதுத் தேர்தலுக்கு அரசாங்கம் திட்டமிடுகிறதாம்!

## கொழும்புப் பத்திரிகை தகவல்

கொழும்பு—

அடுத்த மாதம் நடுப்பகுதிக்குள் நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு ஜூலை மாதம் பொதுத் தேர்தலை நடத்துவது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

பொதுத்தேர்தலை நடத்துவதெனில் அதனை எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னர் நடத்த வேண்டுமென சோதிடர்கள் அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலின் முடிவுகளை ஆராய்ந்த பின்னர், பொதுத் தேர்தலுக்கு செல்வது குறித்து அரசின் கவனம் திரும்பியுள்ளது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜே.வி.பியின் ஆதரவு இன்றியே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு பெரும்பான்மை பலம் கிடைத்துள்ளமையே பொதுத்தேர்தலுக்குச் செல்ல வேண்டுமென்ற கருத்து அரசாங்கத் தரப்பில் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணமெனவும், எனவே இந்தப் பொதுத்தேர்தலை எதிர்வரும் ஜூலை மாதத்துக்கு முன்னர் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட ரீதியான கண்காணிப்பையும் மேற்கொண்டுள்ளார். நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமாதான முயற்சி என்பன பாரதூரமான நிலையிலுள்ள தற்போதைய நிலையில் தேர்தலுக்குச் சென்றால் அது அரசுக்கு எதிராக செயற்படும் சந்தர்ப்பத்தை வழங்கிவிடுமென, ஜனாதிபதிக்கு நெருக்கமான சிலர் தெரிவித்துள்ளனர்.

ஆனால், ஜனாதிபதிக்கு மிக நெருக்கமான நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும உட்பட்ட குழுவினர் சமாதான முயற்சி மற்றும் அரசின் பொருளாதாரக் கொள்கை தொடர்பாக தற்போது நிலவும் நிலைமை மேலும் மோசமடைவதற்கு முன்னர் தேர்தலை நடத்தி, உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெற்ற சாதகமான முடிவுகளை உறுதிப்படுத்த வேண்டுமெனக் கருதுகின்றனர்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஓமல்பே சோபித தேரர், அத்துரலிய ரத்னதேரர், உதய கமன்பில, மற்றும் சம்பிக்க ரணவக்க போன்ற ஜாதிக ஹெல உறுமயவினர் சுதந்திரக்கட்சி சார்பாகப் போட்டியிடத் தீர்மானித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும் தேசிய அரசொன்றை ஏற்படுத்துவது தொடர்பாகவும் பல்வேறு ஆலோசனைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆனால், ஜனாதிபதி மகிந்தவின் தலைமையிலான அரசுக்கு தேர்தலை நடத்தி ஜே.வி.பி நாடாளுமன்றில் பெரும்பான்மையைப் பெற வேண்டுமென்ற கருத்தே வலுப் பெற்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (தே)

## புலிகள் குற்றம்சாட்டிய 7 படையதிகாரிகளும் இடமாற்றம்!

கொழும்பு—

துணை இராணுவக் குழுவினரை இயக்குபவர்களென விடுதலைப் புலிகளால் குற்றம்சாட்டப்பட்ட இராணுவ புலனாய்வுப் பிரிவின் ஏழு சிரேஷ்ட அதிகாரிகள் அந்தப் பிரிவிலிருந்து விலக்கப்பட்டு வேறு பிரிவுகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இவர்கள் துணை இராணுவக் குழுவினரை இயக்குபவர்களென, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் ஜெனிவாவில் இடம்பெற்ற முதல் சுற்று பேச்சுவார்த்தையின்போது அரச தரப்பினரிடம் விபரமான ஆவணங்களைக் கையளித்திருந்தார்.

அரசுக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் எதிர்வரும் 19 ஆம் திகதி ஜெனிவாவில் இரண்டாம் சுற்று பேச்சு நடைபெறுவதற்கு முன்னர் இந்த ஏழு அதிகாரிகளும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கடும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள இந்த அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்த சில வசதிகளும் நீக்கப்பட்டிருப்பதாகவும் அந்தத் தகவல் தெரிவித்தது. (தே)



மொரட்டுவ கடற்கரையில் இறந்த நிலையில் கரையொதுங்கியுள்ள ராட்சத திமிங்கிலத்தைப் படத்தில் காணலாம்.

## சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்

# தலைவர் பதவியிலிருந்து விலக சந்திரிகாவுக்கு நிர்ப்பந்தம்!



கொழும்பு—

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய மாநாடு கடந்த 7 ஆம் திகதி நடைபெறுவதற்கு முன்னர் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலக வேண்டுமென கட்சியின் உயர்பீடம் சந்திரிகாவுக்கு நெருக்கமான வர்த்தகர் ஒருவர் மூலம் இரகசிய செய்தி ஒன்றை அனுப்பியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

7ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன்னர் சந்திரிகா தலைவர் பதவியிலிருந்து விலகாவிடின் தாம் இது தொடர்பாக முடிவெடுக்க வேண்டி ஏற்படுமெனவும் அந்த இரகசிய செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும் இந்த பதவி விலகலை சந்திரிகா முற்றாக நிராகரித்தார்.

தான் வெளிநாட்டில் தங்கியிருக்கும் போது நிகழும் கட்சியின் மறுசீரமைப்பு சட்டவிரோதமானதெனவும், அன்றையதினம் தன்னை கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலக்கினால் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படுமென குறித்த செய்தியை கொண்டுசென்றவரிடமே அவர் தெரிவித்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (தே)

## ஜனாதிபதி செயலகத்தில் இன்று சர்வகட்சி மாநாடு

கொழும்பு—

அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஜெனிவாவில் இடம்பெறவுள்ள இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் அது குறித்து அனைத்துக் கட்சிகளுக்கும் தெளிவுபடுத்தும் சர்வ கட்சி மாநாடு இன்று மாலை 6 மணிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் - இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் அரசாங்கம் கவனத்தில் எடுக்க வேண்டிய விடயங்கள் முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின்னர் இதுவரை இரண்டு தரப்பும் செயற்பட்ட விதம் குறித்து ஜனாதிபதி அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகளுக்கும் தெரியப்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (தே)

# சொல்ஹெய்மின் பாதுகாவலர்களிடம் மேலதிகமாக இருந்த துப்பாக்கி!

## விமானநிலைய அதிகாரிகள் விசாரணை

கொழும்பு—

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சரும், இலங்கைக்கான விசேட சமாதான பிரதிநிதியுமான எரிக் சொல்ஹெய்ம் மற்றும் புதிய சமாதான பிரதிநிதி ஜோன் ஹன்சன் பௌயர் ஆகியோரடங்கிய குழு கடந்த 6 ஆம் திகதி இந்தியாவுக்கு செல்வதற்கு முன்னர் விமான நிலையத்தில் அவர்களை சோதனையிட்டபோது - அவர்களின் பாதுகாப்பு அதிகாரிகளிடம் மேலதிகமாக துப்பாக்கியொன்று கண்டுபிடிக்கப்பட்டதாக விமானநிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சொல்ஹெய்ம் குழுவினர் கடந்த 6 ஆம் திகதி காலை இலங்கைக்கு வந்தபோது ஒரு துப்பாக்கியை மட்டுமே கொண்டு வந்ததாக விமான நிலையத்தில் பதிவுசெய்யப்பட்டிருந்தது. ஆனால் அவர்கள் மீளச் செல்லும்போது அவர்களிடம் மேலதிகமாக மற்றொரு துப்பாக்கி இருந்துள்ளது.



இது தொடர்பாக சிவில் விமான சேவை அதிகாரசபை, இலங்கை விமான கம்பனி மற்றும் விமானநிலைய பொலிஸார் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டபின்னர் அந்தத் துப்பாக்கியையும் எடுத்துச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

இதனால் கடந்த 6 ஆம் திகதி இரவு 7.20 மணிக்கு இந்தியாவுக்கு செல்லவிருந்த விமானம் 25 நிமிடங்கள் தாமதித்தே தனது பயணத்தை ஆரம்பித்துள்ளது. (தே)

# அரசியல் ரீதியான தீர்வையே இந்தியா விரும்புகிறது!

## இந்திய வெளியுறவுச் செயலர்



புதுடெல்கி—

இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியாக அமைதியான முறையில் தீர்வுகாண்பதையே இந்தியா விரும்புகிறது என்று இந்திய வெளியுறவுத்துறை செயலர் ஷியாம் சரண் தெரிவித்துள்ளார்.


நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் மற்றும் நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் நேற்று முன்தினம் புதுடெல்கியில் இந்திய வெளிவிவகாரச் செயலர் சியாம் சரணைச் சந்தித்த பின்னர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒற்றுமை மற்றும் இறையாண்மையைப் பாதிக்காத வகையில் அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தீர்வு அமைய வேண்டும் எனவும் இந்தியா கூறியிருக்கிறது.

தற்பொழுது இலங்கையில் வன்முறைச் சம்பவங்கள் குறைந்து போர்நிறுத்தம் அமுலிலுள்ள சூழலில் சமாதானப் பேச்சுக்களை மேலும் வலுப்படுத்தவேண்டிய அவசியத்தை நோர்வே பிரதிநிதிகள் வலியுறுத்தியிருப்பதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை அரசும் - தமிழீழ விடுதலைப் புலிகளும் தொடர்ந்தும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதன்மூலமே பிரச்சினைக்கு உரிய தீர்வைக் காணமுடியும் என்று எரிக் சொல்ஹெய்ம் ஊடகவியலாளர்கள் மத்தியில் பேசும் போது குறிப்பிட்டார்.

# சரத் பொன்சேகா வழங்கிய இடமாற்றங்களுக்கு தடை!



கொழும்பு—

இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவினால் கடந்த மாதம் இராணுவக் கட்டமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தடைவிதித்துள்ளார்.

இது தொடர்பாக சரத் பொன்சேகாவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கடிதம் அனுப்பியுள்ளார்.

இராணுவத்தில் மேற்கொள்ளப்படும் பதவியுயர்வு மற்றும் இடமாற்றங்களை ஜனாதிபதியின் ஆலோசனையின்றி மேற்கொள்ளக்கூடாது என்றும் அந்தக்கடிதத்தில் உத்தரவிடப்பட்டுள்ளது.

அண்மையில் இராணுவத்தில் முறையற்ற வகையில் பணிஇடமாற்றம் மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்படுவதாக சரத்பொன்சேகா மீது குற்றஞ்சாட்டப்பட்டது. சரத் பொன்சேகாவின் நடவடிக்கையால் பல சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பதவி விலகியிருந்தனர். இது தொடர்பாக சரத் பொன்சேகாவிடம் மகிந்த ராஜபக்ஷ விளக்கம் கேட்டுள்ளதாக அலரி மாளிகை செய்திகள் தெரிவித்தன.

# முதலாவது டெஸ்ட் போட்டி பங்களாதேஷ் அணி 5/355



பதுல்லா —

அவுஸ்ரேலிய - பங்களாதேஷ் அணிகளுக்கிடையே நேற்று பதுல்லாவில் ஆரம்பமான முதல் டெஸ்ட் போட்டியின் ஆட்டநேரமுடிவில் பங்களாதேஷ் அணி 355 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களை இழந்து சிறப்பான நிலையை எய்தியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி அந்த அணியின் ஜாவிட் ஒமரும், சகாரியர் நபீஸும் தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்கினர்.

இதில் ஒமர் 6 பவுண்டரிகள் அடங்கலாக 27 ஓட்டங்களைப் பெற்று ஜிலெஸ்பி வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.


அடுத்து ஹபிபுல் பசார் களமிறங்கினார். அவர் நபீஸுடன் இணைந்து சிறப்பாக ஆடினர். இருவரும் இரண்டாவது விக்கெட்டுக்காக 173 ஓட்டங்



களைச் சேர்த்து அணியை வலுப்படுத்தினர்.

இந்தநிலையில் 11 பவுண்டரிகள் அடங்கலாக 76 ஓட்டங்களைப் பெற்றிருந்த பசார், மக்கில் வீசிய பந்தை லீயிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அவரையடுத்து ரஜின் சாலே, நபீஸுடன் இணைந்தார். இருவரும் சிறப்பாக ஆடியவேளை, 19 பவுண்ட



ரிகள் அடங்கலாக 138 ஓட்டங்களைப் பெற்றிருந்த நபீஸ், மக்கிலின் பந்தில் போல்டானார்.

தொடர்ந்து அஸ்ரபுல் களமிறங்கினார். அவர் 4 பவுண்டரிகள் அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்று ஜிலெஸ்பி வீசிய பந்தில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து அப்ரப் அகமட் களமிறங்கினார். அவர் 29 ஓட்டங்களைப்பெற்று மக்கில் வீசிய பந்தை ஹைடனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இந்தநிலையில் காலித் மசூத் களமிறங்கினார். நேற்றைய ஆட்ட நேரமுடிவில் பங்களாதேஷ் அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 355 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் ரஜின் சாலே 35, காலித் மசூத் 2 ஓட்டங்களுடன் இறுதிவரை ஆட்டமிழக்காதிருந்தனர்.

பந்துவீச்சில் மக்கில் 3, ஜிலெஸ்பி 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

# வலிகாமம் கல்விவலய மட்ட கரப்பந்தாட்டப் போட்டிகள்

சுன்னாகம் —

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான வலயமட்ட கரப்பந்தாட்ட போட்டி சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்றும், நாளையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

வலயமட்ட போட்டிகளில் பங்குபற்ற தெரிவான அணிகள் வருமாறு -

15 வயதுப் பிரிவு -

குழு ஏ : சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், சித்தன்கேணி ஸ்ரீ கணேசா வித்தியாலயம்.

குழு பி : அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், இணுவில் இந்துக் கல்லூரி, ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்.

குழு சி : அருணோதயக் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாசம் மகா வித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

குழு டி : இணுவில் மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மகாஜனக் கல்லூரி.

17 வயதுப் பிரிவு -

குழு ஏ : சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

குழு பி : சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம், அருணோதயக் கல்லூரி.

குழு சி : இணுவில் மத்திய கல்லூரி, வட்டு.மத்திய கல்லூரி, மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயம்.

குழு டி : மகாஜனக் கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி.

19 வயது பிரிவு -

குழு ஏ : இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், வட்டு. மத்திய கல்லூரி, இணுவில் இந்துக் கல்லூரி.

குழு பி : சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், இணுவில் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை.

குழு சி : சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, அருணோதயக் கல்லூரி.

குழு டி : ஸ்கந்தவரோதயக் கல்லூரி, மாதகல் சென்.ஜோசப் வித்தியாலயம், மகாஜனக் கல்லூரி.

இந்தப் போட்டிகள் யாவும் மைதானம் 1, 2, 3, 4 ஆகப் பிரிக்கப்பட்டு இடம்பெறும். போட்டிகளின் காலிறுதி, அரையிறுதி என்பன நாளை இடம் பெறும். போட்டிகளின் மைதான இணைப்பாளராக எம்.நடராஜாவும், போட்டி இணைப்பாளராக எம்.லோகநாதனும் கடமையாற்றுவர்.

(47, 72)

# அபுதாபி போட்டிகளில் இந்தியாவை வீழ்த்துவோம்

## பொப் வூல்மர் சூளுரை

கராச்சி —

அபுதாபி போட்டிகளில் இந்திய அணியை நிச்சயம் வீழ்த்தி பதிலடி தருவோமென பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பொப் வூல்மர் தெரிவித்துள்ளார்.

இந்திய - பாகிஸ்தான் அணிகள் மோதும் 2- ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் எதிர்வரும் 18, 19ஆம் திகதிகளில் அபுதாபியில் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடரில் பாகிஸ்தானின் வெற்றி வாய்ப்புகள் பற்றி அந்த அணியின் பயிற்சியாளர் பொப் வூல்மர் கூறுகையில் -

அண்மைக்காலமாக பாகிஸ்தான் அணி மிகவும் சிறப்பாக விளையாடி வருகிறது. ஆனால், இந்திய அணிக்கு எதிராக மட்டும் எங்களால் வெற்றி பெற இயலவில்லை. இதற்கு நாங்கள் இம்முறை பதிலடி தருவோம்.

இங்கிலாந்து சுற்றுப்பயணம் செல்வதற்கு முன் அணியின் தன்னம்பிக்கை அதிகரிக்க இந்த வெற்றி உதவும்.

மிகவும் அதிகமான போட்டிகளில் விளையாடுவதால் வீரர்களின் உடல் நிலை பாதிக்கப்படுகிறது. இலங்கைக்கு எதிரான தொடரில் வீரர்களின் ஆட்டம் மிகவும் திருப்தியளித்தது.

மொகமட் அசீப் மிகச் சிறந்த பந்து வீச்சாளராக உருவெடுத்துள்ளார். ஆனால், அவரை வசீம் அக்ரம், வக்கார் யூனுஸ் ஆகியோருடன் ஒப்பிடுவது தவறு.

தொடக்க வீரராகக் களமிறங்கிய சொகைப் மலிக் தனது திறமையை நிரூபித்துள்ளார். இங்கிலாந்து தொடரில் அவர்தான் தொடக்க வீரராகக் களமிறங்குவார். இன்சமாம் தலைமையில் அணி சிறப்பாகச் செயற்படுகிறதெனத் தெரிவித்தார்.

# விளையாட்டு

# ரேக்கி கிண்ண முதல்சுற்றில் ஜொனியன்ஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணம் —

இலங்கை கிரிக்கெட்டின் தரம் 3 இற்காக யாழ்ப்பாணம் கிரிக்கெட் சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட 13 கழகங்களுக்கிடையில் நடைபெற்று வரும் 50 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் விறுவிறுப்பான முதல் சுற்று ஆட்டமொன்றில் யாழ்.ஸ்ரான்லி விளையாட்டுக் கழக அணியை ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் தோற்கடித்தது.

யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தினர் 28 ஓவர்களில் 124 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் மாஜா ஆட்டமிழக்காமல் 39, சிதம்பரதாசன் 21, சதீஸ் மற்றும் சியாம்சன் ஆகியோர் தலா 12 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் அணி சார்பில் மயூரன், மதன்ராஜ், நிரூபன், சஞ்சீவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 33 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 126 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றனர்.

ஜொனியன்ஸ் அணியினர் ஒரு கட்டத்தில் 9 விக்கெட் இழப்புக்கு 102 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். எனினும், இறுதி விக்கெட் இணைப்பாட்ட ஜோடியான மயூரன் மற்றும் சஞ்சீவன் ஆகியோரின் நிதானமான ஆட்டத்தால் இந்தப் போட்டியில் ஜொனியன்ஸ் அணி வெற்றிபெற்றது.

இதில் மயூரன் ஆட்டமிழக்காமல் 18, நிரூபன் 13, காண்டீபன் 12, சஞ்சீவ் 10, ரதீஸ் மற்றும் சஞ்சீவன் ஆகியோர் தலா 8 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி அணியின் சார்பில் ஜெனீஸ் மற்றும் ரதீவ் ஆகியோர் தலா 3, காந்தன் 2, சாம்சன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

(58)

# மோசமான துடுப்பாட்டமே தொடரை இழக்க காரணம்

## கொலிங்வூட் தெரிவிப்பு

லண்டன் —

இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் போட்டித் தொடரை இங்கிலாந்து அணி இழக்கக்காரணம் மோசமான துடுப்பாட்டமே காரணம் என்று அந்த அணி வீரர் கொலிங்வூட் கூறியுள்ளார்.

போல் கொலிங்வூட் இங்கிலாந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியிருப்பதாவது-

கொச்சின் போட்டியில் தோற்று இந்தியாவுக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரை இழந்தது மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது. இதே தோல்வியுடன் நாடு திரும்ப எவரும் விரும்பவில்லை. இனிவரும் போட்டிகளில் எங்களது முழுத்திறனையும் வெளிப்படுத்தி கடுமையாக போராடி வெல்லுவோம்.

கொச்சினில் தட்பவெட்ப நிலை நமப முடியாத வகையில் மிகவும் மோசமாக இருந்தது. இலங்கையிலுள்ள கொழும்பு நகரின் தட்பவெட்ப நிலையை ஒத்ததுபோல் இருந்தது. நான் கிரிக்கெட் விளையாடச் சென்ற நாடுகளில் இது போன்ற வெப்பமான இடத்தை பார்த்தது இல்லை. இது எங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியது.

மைக்கல் வோண், ஜைல்ஸ், சைமன் ஜோன்ஸ், ட்ரெஸ்கொதிக் ஆகியோர் காயம் அடைந்ததால் ஆடமுடியாமல் போனது பெரும் பாதிப்பாகும். குறிப்பாக ட்ரெஸ்கோதிக் ஒருநாள் போட்டியில் முக்கியமான வீரர். மாற்று ஆட்டக்காரர்களாக களமிறங்கிய வீரர்கள் துடுப்பாட்டத்தில் சிறப்பாக செயற்படாதது




தோல்விக்கு காரணமாகும்.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிக்கு முன்பு இங்கிலாந்து அணி சரியான பாதைக்கு திரும்பிவிடும் என அவர் கூறினார்.

# அணித்தலைவர் பொறுப்பை சுமையாகக் கருதவில்லை

## ஷேவாக் கூறுகிறார்




கௌகாத்தி —

கப்டன் பொறுப்பை சுமையாகக் கருதவில்லை என்று வீரேந்தர் ஷேவாக் கூறியுள்ளார்.


ராவிட்டுக்குப் பதிலாக இரண்டு ஆட்டங்களுக்கு கப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார் ஷேவாக். இது தொடர்பாக கௌகாத்தியில் நேற்றுமுன்தினம் நிருபர்களிடம் ஷேவாக் கூறியதாவது -

அணியின் கப்டனாக இருந்தாலும் தொடக்க வீரர் என்ற வகையில் ஓட்டங்கள் குவிப்பதில் சிரத்தையுடனே இருப்பேன். கப்டன் பொறுப்பு அதற்கு குறுக்கே நிற்காது எனத் தெரிவித்தார்.

இங்கிலாந்துக்கு எதிராக நடைபெற்று முடிந்த 4 ஒருநாள் போட்டிகளிலும் ஷேவாக் குவித்த மொத்த ஓட்டங்கள் 73 மட்டும் என்பது குறிப்பிடத்தக்கது.



இந்திய - இங்கிலாந்து அணிகளுக்கிடையே நேற்று கௌகாத்தியில் நடைபெறுவதாக இருந்த 5ஆவது ஒருநாள் போட்டி கடும் மழை காரணமாக நடைபெறவில்லை. இதனால் கொதித்தெழுந்த ரசிகர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதையும், மைதானத்தை உலர வைப்பதற்காக ஹெலிகொப்ரர் பயன்படுத்தப்படுவதையும் படங்களில் காணலாம்.



# ஒரே இரவில் ஆறு வீடுகளில் திருடர்கள் புகுந்து அட்டகாசம்

சுதுமலை —

நல்லூர் சட்டநாதர் வீதி, சங்கிலியன் வீதி பகுதிகளிலுள்ள 6 வீடுகளில் ஒரே இரவில் பல லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள், பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 2 மணிமுதல் 4 மணி வரை தொடர்ச்சியாக 6 வீடுகளில் 10 இற்கு மேற்பட்ட திருடர்களைக் கொண்ட குழுவினரால் இந்தத் திருட்டு மேற்கொள்ளப்பட்டதுடன், பெறுமதியான பொருட்களும் அடித்து நொருக்கப்பட்டன.

முகத்தை கறுப்புத்துணியால் கட்டியவாறு வாள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் வாகனத்தில் வந்த குழுவினரே இந்தக்கொள்ளைகளை மேற்கொண்டனர்.

சட்டநாதர் வீதியிலுள்ள 3 வீடுகள், சங்கிலியன் வீதியில் ஒரு வீடு, மணல்தறை ஒழுங்கையில் இரண்டு வீடுகளிலேயே ஒரே குழுவினர் இந்தத் துணிகரத்திருட்டை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தங்கநகைகள், பணம், 02 துவிச்சக்கரவண்டிகள், கைத்தொலைபேசி என்பன கொள்ளையடிக்கப்பட்டதுடன் ஜன்னல் கதவுகளும் அடித்து நொருக்கப்பட்டன. சட்டநாதர் வீதியில் தொலைபேசி இணைப்பை துண்டித்துவிட்டே பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன.

இதே வீதியில் கூரையைப் பிரித்துக்கொண்டு வீட்டுக்குள் இறங்கிய திருடர்கள் இருவரை வெட்டிக் காயப்படுத்தியதுடன் பொருட்களை அபகரித்துச் சென்றுள்ளனர். சம்பவம் இடம்பெற்றவேளை அயல் வீட்டார் மின்குமிழை ஒளிரவிட வீட்டு உரிமையாளரின் பெயரைக்கூறி மின்குமிழை அணைக்குமாறு எச்சரித்தனர்.

வாகன நடமாட்டம் அதிகமாக இடம்பெற்றதுடன் சம்பவம் நடைபெற்றவுடனேயே சம்பவ இடத்துக்கு கோப்பாய் பொலிஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, யாழ். நகரில் நேற்று முன்தினம் அதிகாலை சைக்கிள்களுடன் இரண்டு சந்தேகநபர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளதாகவும் தெரியவருகிறது. (91)



சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பொற்பதி கடற்றொழிலாளி ஒருவருக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்பட்ட வலைத் தொகுதியை மணற்காடு பங்குத்தந்தை வண. பிதா றோய் அடிகளார் கையளிக்கிறார். (21)

# கைதடி, நாவற்குழி பிரதேச வயற்செய்கையாளர்களுக்கு

யாழ்ப்பாணம் —

கைதடி ஆறுகிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த நெற்செய்கையாளர்களும் மற்றும் நெணியன், கோப்பாயன் கிராய், மொட்டை ஆலடி மேற்கு பகுதி போன்ற நாவற்குழி கிழக்கு விவசாய சம்மேளனப் பிரிவுக்குள் நெற்செய்கையில் ஈடுபடுகின்ற விவசாயிகளும் - காலபோக நெற்செய்கையின் போது உள்ளீடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும், காணி இடாப்பு தயாரிப்பதற்குமாக நாளை காலை 10 மணியளவில் கைதடி கமநலசேவை நிலையத்தில் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

வயற்காணி உறுதியின் நிழற்படபிரதி குத்தகை செய்கையாளராயின், குத்தகைச் சீட்டு நிழற்படப்பிரதி மற்றும் மூலப்பிரதிகளையும் கொண்டு வருமாறு நாவற்குழி கிழக்கு விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

# வலி. தெற்கு பிரதேச செயலக கலை இலக்கியப் பெருவிழா!

உடுவில் —

வலிகாமம் தெற்கு பிரதேச செயலக கலாசாரப் பேரவையால் நடத்தப்படும் கலை இலக்கிய பெருவிழா இன்றும், நாளையும் பி.ப 2.30 மணி முதல் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வலி. தெற்கு பிரதேச கலாசார பேரவை தலைவர் சி.திருவாகரன் தலைமையில் முன்னாள் பிரதேச செயலர் ஆ.மகாலிங்கம் ஞாபகார்த்த அரங்கில் நடைபெறும். முதல் நாள் நிகழ்வுகளுக்கு- முன்னாள் அரச அதிபரும் வடக்கு - கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்ட பணிப்பாளருமான செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலைவாணி இராமநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் செவ்வாய்கிழமை பி.ப 2.30 மணிக்கு வலி. தெற்கு பிரதேச உதவி செயலாளர் த.மஞ்சுளாதேவி தலைமையில் மகாவித்துவான் வீரமணி ஐயர் அரங்கில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கு யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் பிரதம விருந்தினராகவும், வணிக பீட பீடாதிபதி க.தேவராஜா, வலிகாமம் வலயக் கல்வி பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கலை நிகழ்ச்சிகளாக இசையரங்கு நடனம், கிராமிய பாடல், நகைச்சுவை நாடகம், பட்டிமன்றம், நாட்டார் பாடல், இசை நாடகம் கவியரங்கு, கிராமிய நடனம் என்பனவும், கலைஞர் கௌரவிப்பும் இடம்பெறும். (101)

## முத்துமாரியம்பாள் ஆலய சங்காபிஷேகம்

இணுவில் —

இணுவில் மேற்கு - செட்டி வீதி அருள்மிகு ஆதிசிவ முத்துமாரியம்பாள் ஆலய சங்காபிஷேகம் இன்று காலை 9.15 மணியளவில் சகல கலைகளுடன் இடம்பெறும்.

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பிற்பகல் 5 மணிமுதல் தெய்வீக வாக்கு கொடுத்தல், சாந்திகள், நூல் கட்டுதல், நாகதோஷ நீக்கம், விதி முறை செய்தல் ஆகியன இடம்பெறும்.

# பிரதேச சபையின் செயற்பாட்டுக்கு மக்கள் ஒத்துழைப்பு தரவேண்டும்

## பிரதேச சபை செயலாளர் கோரிக்கை

நீர்வேலி —

இந்த வருடமும் அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு வலி. கிழக்கு பிரதேசத்தை முன்னேற்றுவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பை வேண்டி நிற்பதாக வலி.கிழக்கு பிரதேசசபை செயலாளர் த.நடராசா கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள பத்திரிகைச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

கடந்த வருடம் எமது சபையானது - சபை நிதி, அரசாங்க அதிபரிடம் பெற்ற நிதி, மாகாண சபை நிதி, நிகொட் நிறுவன உதவி மூலம் பெற்ற நிதிகளிலிருந்து பலதரப்பட்ட அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டது. அத்துடன் நாடாளுமன்ற உறுப்பினர்களது உதவியால் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலமும் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த வருடமும் அவ்வாறான பணிகளை மேற்கொண்டு எமது வலி. கிழக்குப் பிரதேசத்தை முன்னேற்றுவதற்கு பொதுமக்களது ஒத்துழைப்பை எமது சபை பெரிதும் வேண்டி நிற்கிறது.

எனவே மக்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய சோலை வரி, வியாபார வரி, வாடகைகள், குத்தகைகள், பொது உரிமங்களை உடன் செலுத்தி உதவும்படி வேண்டுகிறோம்.

மேலும் சட்ட நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்காமல், அனுமதி பெறப்படாது ஆரம்பிக்கப்படும் கட்டட வேலைகளுக்கு அனுமதி பெறுவதன் மூலமும் அனுமதி பெறாமல் ஆரம்பிக்கப்படுகின்ற வியாபார நிலையங்கள் அதற்கான அனுமதியை பெறுவதன் மூலமும் சபையின் நிதி வளத்தை உயர்த்த முடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த வருடத்துக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு போதிய நிதி வசதி இல்லாதிருப்பதால் சனசமூக நிலையங்கள், பொது நிறுவனங்கள் மக்களுக்கு சபையின் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி, நிதி வளத்தை பெருக்கி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஒத்துழைக்கும்படி வலி. கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் அன்புடன் கேட்டுக்கொள்கிறார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்தர மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

சாவகச்சேரி —


இந்த வருடம் நடைபெறவுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான விசேட வழிகாட்டல் கருத்தரங்கு இரண்டு பிரிவுகளாக நடத்தப்படவுள்ளது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயம் நடத்தும் இந்தக் கருத்தரங்கு நாளை காலை 9 மணி தொடக்கம் மாலை வரை சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

நாளையதினம் வணிகக்கல்வி, கணக்கீடு, பொருளியல் ஆகிய பாடங்களுக்கும், எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் இந்து நாகரிகம், இந்து சமயம் ஆகிய பாடங்களுக்கும் விரிவுரைகள் நடத்தப்படவுள்ளன. இந்தக் கருத்தரங்கில் உயர்தர மாணவர்கள் மட்டுமல்லாது ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் கருத்தரங்கில் கலந்துகொள்ளும் மாணவர்கள் மதிய உணவைக் கொண்டுவரவேண்டுமெனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். யாழ்.பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த துறைசார் விரிவுரையாளர்களாலேயே விரிவுரைகள் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (29)

# தவக்கால நற்சிந்தனை



மீட்புக் காவியத்தின் கடைசிக் கட்டம் நெருங்கி வந்த நேரம். யூதர்களின் பாஸ்கா விழாவும் அண்மித்துக்கொண்டிருந்தது. இவ்வேளையில்தான் யேசு, மார்த்தாவின் இல்லத்துக்கு வந்தார். இவ்வேளை அவள் யாருமே எதிர்பாராத விதத்தில் விலையுயர்ந்த நறுமணத் தைலத்தை அவருடைய பாதங்களில் வார்த்தாள். இச்செயலானது அங்கிருந்தோருக்கு வியப்பை ஏற்படுத்தியது.

தன்னிடமுள்ள அனைத்தையும் அளித்துவிட்டு இன்னும் அளிப்பதற்கு எதுவுமில்லை என வருந்திய மரியா - யேசு மீது கொண்ட பாசமும் இத்தகையதே. வார்த்துப் பூசிய தைலம் வழியத் தொடங்கிற்று. விலையுயர்ந்த தைலம் வீணாகிறதே எனக் கவலைப்பட்டோருக்கு வழியத் தொடங்கிய தைலத்தை தன் கூந்தலால் துடைத்தாள். யூதர் முறைப்படி பலர் முன்னிலையில் முடிந்த கூந்தலை அவிழ்ப்பது உயர்குலப் பெண்களுக்கு இழுக்கு.

மனிதநேயம் மறந்த கும்பலின் குழப்பக் கணிப்புக்கள் மரியாவின் பார்வையில் செல்லரித்துப்போன குவியல்கள் ஏக்கமும், நோக்கமும் யேசுவின் பாதங்கள் மட்டுமே. அவற்றை பற்றிக்கொள்ளும் மகிழ்வினால் அவளது பேரன்பு தன்னையுமறியாமல் மரணத்துக்குப் பின் பூசப்படும் தைலத்தை முன்னதாகவே வார்த்தது. எனவே விமர்சனங்களைப் பற்றி கவலையுறாது யேசுவின் பேரன்பை பிறரோடு பகிர்ந்து வாழ்வோம்.

*மோ.தார்சீசியஸ்*

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



பெயர் : வ.யாழினி
முகவரி : கட்டுடை.




# சின்னஞ்சிறு செய்திகள்

## தேர்த் திருவிழா

மட்டுவில் —

சாவகச்சேரி நுணாவில் மேற்கு கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தில் நாளை காலை தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன் கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் மாலை கொடியிறக்கல், திருவூஞ்சல் என்பனவும் இடம்பெறும்.

மஹோற்சவக்கிரியைகள் யாவும் 'கிரியா கானகலாமணி' சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்களால் நடத்தி வைக்கப்படும். (24)

## விசேட பூசை

மட்டுவில் —

மட்டுவில் வடக்கு அருள்மிகு தலைவாசல் வைரவர் ஆலயத்தில் நாளை பங்குனி உத்தரதினத்தன்று விசேட பூசையும், அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பகல் அன்னதானமும் இடம்பெறும். (24)

## யோகாசன வகுப்பு

யாழ்ப்பாணம் —

நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் ஆண், பெண் இருபாலாருக்கும் வெள்ளி, சனி தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 6.45 மணிமுதல் காலை 7.45 மணிவரை யோகாசன வகுப்புக்கள் நடைபெறுவதாக யோகாசன ஆசிரியர் க.ரவீந்திரன் அறிவித்துள்ளார்.

## பெயர்களை பதிவு செய்யவும்

மட்டுவில் —

உயர்பாதுகாப்பு வலயங்களான வசாவிளான், தெல்லிப்பழை மற்றும் கோயிலாக்கண்டி, தனங்களப்பு போன்ற பகுதிகளில் இருந்தும் ஏனைய உயர்பாதுகாப்பு வலயப்பகுதிகளில் இருந்தும் இடம் பெயர்ந்து கல்வயல் ஜே/305 கிராம அலுவலர் பிரிவில் தங்கியிருப்போ[illegible] நிவாரண வசதிகளுக்காகத் தங்களது பெயர் விபரங்களை இன்று காலை 9 மணிக்கு தமது அலுவலகத்தில் வந்து பதிவு செய்யுமாறு கல்வயல் கிராம அலுவலர் வை.இராசரத்தினம் கேட்டுள்ளார். (24)

## சர்வோதய கிராமங்களில் அபிவிருத்தி திட்டங்கள்

யாழ்ப்பாணம் —

யாழ்.மாவட்டத்தில் 60 கிராமங்களை சர்வோதய நிறுவனம் தெரிவு செய்து, பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது.

இந்த 60 கிராமங்களும் யாழ்ப்பாணம், நல்லூர், சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், சாவகச்சேரி, கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பத்து பிரதேச செயலகங்களிலிருந்தும் சர்வோதய கிராமங்களாகத் தெரிவுசெய்யப்பட்டு பல்வேறு அபிவிருத்தி திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.




# வயது வந்தது

சிறுகதை

சி.சுதந்திரராஜா

கேலியும், கிண்டலும் கும்மாளங் கூத்தும் கிழவருக்கும் கேட்கிறது. குனிந்த பார்வை-யோகர் சுவாமிகளின் வெண்முடியை நினைவூட்டும் வெண்முடி- அரையில் மடித்துக் கட்டியிருந்த வேட்டி மாத்திரமே- மேனியெல்லாம் வெறுமை காட்டி வெளித்தெரிகிறது. நெஞ்சுப் பகுதியில் பூப்பூத்தது போல் வெள்ளை மயிர்க்கற்றை. சித்தன் போக்கு சிவன் போக்கு என்பதை போன்ற அலட்சியம். கிழவரையே எட்டியெட்டிப் பார்த்த குமரியர் கிழவரின் வயதை அறிந்தோ அறியாமலோ ''களுக்''கென்ற நமுட்டுச் சிரிப்புடன் ஆமைகளின் கழுத்துக்களாக உள்வாங்கிக் கொண்டனர். அவர்களுக்கெல்லாம் அங்கே வேலை வெட்டிகள் இருப்பது மறந்து வேவு பார்த்து ரசித்தனர்.

கிழவரின் இருப்பிடத்துக்கு முன்னாலேயே பென்னம் பெரிய காணிக்குள் ஊர் பேர் இல்லாத பல இளசுகள், அநாதை ஆதரவற்றவர் குவிந்திருந்தனர். வெளியில் அலைவதோ இல்லை. வெளியில் தென்படுவார் எல்லோருமே இவர்களுக்கு ஒருவகைக் கிளுகிளுப்பை ஊட்டி வைப்பவர்களேயானார்கள். கிழவரும் அப்படியேதான். ஆதிகாலத்துக் கூட்டு வாழ்க்கை துலங்கிட கிடாரங்களில் நீர்க்கொதிப்பு நடைபெறும். கெட்டு வெட்டுங் காலங்களில் அந்த நீண்ட மதில்களில் தோரணங்கள் போலவே புகையிலை காயவிடப்பட்டிருக்கும். குமரியர் அரையிலேதுண்டுகள கட்டியபடி அயலிலே தெரிந்த புகையிலைத் தோட்டங்களில் வெட்டு வேலையில் கெட்டுகள் கட்டுவதிலேயே லயித்துப் போவதுமுண்டு.

தினமும் கிழவரின் போக்குவரத்து இவர்களைத் தாண்டித்தான் சாத்தியமாகிறது. பஞ்சுப் பொதி தலையைக் கண்டவுடன் கிண்டலடித்துத் தமக்குள் மகிழ்வார்கள். ஆயுதக் கிட்டங்கி அறைக்களஞ்சியம் கூட அதனுள் இருக்கிறது. சுற்றிவரத் தார்ப்பீப்பா வெட்டி நேர்ப்படுத்திக் கிட்டங்கிக்கு வேலியடைப்புச் செய்திருக்கிறார்கள். உள்ளுக்குள் நடப்பது வெளியுலகுக்குத் தெரிந்து விடாதிருக்கப் பகீரதப் பிரயத்தனம் எடுத்திருப்பதும் புரியவே செய்தது.

நோவெண்ணெய் 'அப்புக்குட்டியர் என்றெல்லாம் ஒரு இடுகுறிப் பெயர் கிழவருக்கு வாய்ததுமிருந்தது. புகையிலை தேர்ந்து பாடமாக அடுக்குவதில் கிழவர் கைதேர்ந்தவர். கழுத்துச் சுழுக்கு வந்து விட்டால் அங்குள்ள எவருக்கும் கிழவரே சர்வ நிவாரணியாகத் தென்பட்டார். சுருட்டுக் கட்டுவதுமுண்டு. இப்படி இந்தக் கிழவர் பலசோலிக்காரன் தான். ஆனால், தனித்த சீவியக்காரன். கரணைக் கிழங்குக் குழம்புடன் பருப்புக்கறிச் சமைத்துத் தள்ளிவிட்டிருப்பார். படுக்கைக்குப் போகு முன் புட்டிலோ பாணிலோ அவருக்குப் போசனப் பழக்கமுமிருந்தது. சுருட்டுச் சுற்றுகிற இடத்தில் அவருக்குத் தினக் கூலியாக ஐந்தோ, ஆறோ சுருட்டுக் கட்டுகளே கிடைக்கும்.

விசயரத்தினம் கிழவரின் வளர்ப்பு மகன் பட்டணத்திலே ஒரு தொழில் என்பான். அச்சுக் கூட எழுத்துக்களை கோர்த்துக் காட்டுகிறவன். அவனுக்கு அதனால் வரும் வீம்பைப் பார்த்து கிழவர் பிரமிக்கிறதுண்டு. கலியாண அழைப்பிதழ்கள் அச்சிட வருபவரிடம் சண்டித்தனம் காட்டி அச்சுக் கூலியில் பேரம பேசி கலியாணத்துக்கு மாப்பிளை தானே தான் என்கிற வகையில் வாய்க்குதர்க்கம் செய்வதில் வல்லோன். அவனைக் கிழவர் வழிக்குக் கொண்டு வந்து, கால் கட்டுப் போட்டு பெண் வீட்டுக்கே அனுப்பி வைத்து ஓடிந்து போனார். அவனோவெனில் கிழவரின் வாசஸ்தல வாரிசு தானேதான் என அடுத்தூறல் சட்டம் பேசி சாசனம் ஆக்கிடல் வேண்டும் என்றெல்லாம் பின்னரும் வதைத்தான். திண்ணை எப்போ காலியாகும் என்பது போல் அவதிப்பட்டான்.

லில்லி மொன்ரோசறியிலேயே விசயரத்தினத்துக்கு வாய்க்கப்பட்டவள் ஆசிரியை. இருந்தாலும் நாளொன்றுக்கு ஒரு புது வீடியோப் படமெடுத்துப் பார்ப்பதிலே அதிசூரத்தனம் கொண்டிருந்தாள். ஒவ்வொரு நடிகனையும், நடிகையையும் இமிட்டேட் செய்து காண்பிப்பாள். குரலையும் அதற்கேற்ப மாற்றிக் கீச்சுக் காட்டி ஒப்புவிப்பாள். விசயரத்தினம் சகித்துத் தள்ளினான். இடைநடுவே - அவளுக்குச் சொத்துச் சுருட்டல் சிந்தனை இழையோடி நிற்கும். கிழவர் காலியானதுமே தான் குபேரபுரி இளவரசியாகி ஐஸ் தரையில் மிதப்பது மாதிரியான கனவுகள் காண்பாள்.



வீடியோவில் ஓடுகின்ற பாட்டுக் கட்டங்கள் எல்லாம் தனக்கேயுரித்தான லொக்கேஷன் ஸ்பொட் என்று கணக்கெடுப்பாள். அவளது மிதப்பு நிலையைக் குலைப பாரில்லை.

வீடியோ வாடகைக்காரனோடு அவளது சிநேகிதம் வலுத்தது. கட்டணமின்றிக் கூட கொப்பிகளைக் கொடுக்குமளவு கண்ணை மறைத்தது. அவளூடாகவே கிழவரின் வீட்டு முன்றலில் ஆயுதக் கிட்டங்கி இருக்கின்ற விஷயமும் கசிந்து கொண்டது. மறைமுகமாகக் கிடந்த அந்த இடத்தால் விசயரத்தினம் பெரும் மனக்கிலேசம் அடைந்திருப்பதும் பொசிந்து கொண்டது. அயலில் உள்ள எல்லோரும் எந்த நேரமும் பெருத்த தாக்குதலுக்கு நியாயமான எதிர்பார்ப்புடன் நெஞ்சிலே நெருப்பைக் கட்டிக் கொண்டிருப்பதாக பறையடித்தாள்.

பதுங்கு அரண் அமைத்திட விசயரத்தினம் யோசனை சொல்லியிருந்தான். கிழவர் ஏற்கவில்லை. திடமாகவே மறுதலித்தார். பனங்குத்திகளைக் கிடையாகப் போட்டு நிலத்தில் ஏழடி தோண்டி நாற்சதுரப் பதுங்கு அரண் அமைத்திட அவரைத் தவிர்ந்த அயலார் முனைவதும் தெரிந்துதான் வைத்திருந்தார். நவீன கல்லறை அமைப்பதிலே நம்பிக்கையில்லாதிருந்தார்.

வயது வந்தது என்று கூறிய குமரியர் முறுகல் தயார் நிலைக்குள்ளாகி பொலித்தீன் சாக்குப் பைகளிலே மூட்டை மூட்டையாக மண்ணை அமுக்கி அடுக்கி அரண் போட்டேவிட்டிருந்தனர். கிழவரோ கிலி கொண்டவராயில்லை. காப்பெற் - பொம்மிங்ஸுக்குப் பயந்த அரச ஊழியர் இடம் பெயர்ந்து கொழும்புக்கு வரவே ஆசைப்பட்டனர். கைலாகு கொடுத்து அவர்களைக் காப்பாற்றி அரசாங்க அதிபரே அனுப்பி வைக்க முன்னிலையும் எடுத்திருந்தார்.

எதிர்பார்த்தபடி பேரிரைச்சல் போட்டபடி பொம்மர் வான்வழி வந்தது. அக்கம்பக்கத்து ஆட்டுக்குட்டிகள் கட்டிப் போட்டிருந்த கயிற்றையே அறுத்தெடுத்தபடி தலைதெறிக்க ஓடி மறைந்தன. குண்டுமாரி பொழிந்திட நாய்கள் எல்லாம் சேர்ந்து குரைத்த குரலின் அகோரம் மேகத்தையே கிழித்தெடுத்தது. ஆயுதக் கிட்டங்கியைக் குறி பார்த்தபடி பருத்த, கனத்த குண்டுகள் வானிலிருந்தே வீழ்ந்தன.

கிழவரின் கழுத்தோரத்தில் வெடித்துச் சிதறிய பெருஞ் சன்னம் உள்ளே ஊடுருவி வெளி வந்திருந்தது. சலனமின்றி கண்கள் திறந்தபடி தரையில் மல்லாந்து கிடந்தார்.அவரது கண் மடல்களை மூடக்கூட அங்கு எவருமே எஞ்சியிருக்கவில்லை.

* * *

---

உருவகக் கதை

# மீள்தல்


சோடைத் தென்னை மரத்தை கணேசனும், குமாரும் த்றிக்க அத்தானும் பக்கத்து வீட்டுப் பொடியனும் பதுங்கு குழி வெட்டுகிறார்கள்....

திடீரென பலாலியிலிருந்து ஷெல்கள் கூவிக் கொண்டு வந்தன.

எல்லோரும் விழுந்து படுங்கோ! குமார் கத்தினான். ஹெலியும் உதவிக்கு வந்தது. கிழக்குப் பக்கம் வெடிச்சத்தங்கள் கேட்டுக் கொண்டிருந்தன.

கடைக்குட்டி வீரிட்டு அழுதான்.

தாய் அவனைத் தன்னோடு அணைத்துக் கொண்டாள்.



ஏனெம்மா எங்களைச் சுடுறாங்கள்.

குழந்தையின் வினாவுக்கு ஒருவரிடமும் பதிலிருக்கவில்லை.

இரவு பதுங்குகுழிக்குள் சென்றதால் கொஞ்சம் நிம்மதி பிறந்தது. மூத்தவனுக்குச் செவிவழிப்பாடம் சொல்லிக் கொடுத்தேன். ஜாம்போத்தல் விளக்கு சாப்பிடுவதற்கு மட்டுமே. நாட்கள் ஓடின. ஒரு நாள்,

ஒரு சோடி பற்றியை பலமுறை கடித்து வானொலியுள் திணித்தேன்.

தலைப்புச் செய்திகள்.....

ஷெல் வீச்சில் அப்பாவிப் பெண்கள் உட்பட பத்துப் பேர் துடிதுடித்துப் பலி!

கிளாலிக் கடனீரேரியில் பத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களின் கடற்கலம் மூழ்கடிப்பு.

அமெரிக்க போர்ப் பயிற்சிக்கப்பல் இலங்கை வருகிறது.

என்னப்பா...என்ன ....வாய் புலம்பிறியள்.

மனைவியின் அதட்டலுடன் மெல்ல எழுந்தேன்... ம்.. நான் ஏன் பயப்பட வேண்டும்.

ஏனம்மா எங்களைச் சுடுறாங்கள் என்று கேட்ட கடைக்குட்டி கூட எல்லையில் கருவி ஏந்தி நிற்கிறானே.

நாச்சி

---

# நம்மூர் கலாசாரம்!



காலையில் கன்னியைக் கண்டான்; அவள் மேல்
காதலைக் காளையும் கொண்டான்
வேளைகள் நெருங்கும் என்றிருந்தான்; தினமும் தன்
வேட்கையைத் தீர்த்திட முயன்றான்
ஓலையில் எழுதியே கொடுத்தான்; அவள் அதை
ஒருமுறைக் கிருமுறை படித்தாள்
வேலையை வெட்கத்தை இழந்தான்; இப்போ அவள்
வெளிநாடென்றுமே பறந்தாள்!

தாடியைத் தனயனும் வளர்த்தான்; அவளோ
தமிழினைத் தப்பென்று மறந்தாள்
கோடியாய்ப் பணத்தினை இழந்தான்; அந்தக்
கோதையைத் தேடியே அலைந்தான்
நாடினை நகரினை மறந்தான்; அந்த
நங்கையின் நினைவினில் திளைத்தான்
பீடியை விரும்பியே சுவைத்தான்; இப்போ
“பாடியில் கான்சராம்” பயந்தான்!

கண்டியாம் ஊராம் “கவர்மென்ட்” தொழிலாம்
லண்டனாம் என்றதும் தன்லட்சியம் மறந்தாள்
செண்டுகள் கொடுத்தாள் சேலையை மறந்தாள்
“சொப்பிங்” போனாள் இதுவே சொர்க்கமாம் என்றாள்
கண்டதும் காளையைக் கையினால் அணைத்தாள்
கட்டிய கணவனை அக்கன்னியும் பிரிந்தாள்
இன்றைய பெண்களின் இழிநிலை இதுவாம்!
இதனையும் நீவீர் மாற்றிட நினைப்பீர்!
என்றுமே சொல்வது எவனடா என
எண்ணிடும் முன்னே; நானும் முடிக்கிறேன் இதையாம்!

– க.கமல் –

# கவிதைப் படிகள்

## காதலின் கடைசி நிலையா?

என் இதய துடிப்பிற்கு காரணமானவளே?
உன்னை நினைக்காமலும் இருக்க முடியவில்லை
உன்னை நினைக்கையில் என் கண்கள் எல்லாம்
நீர் நிறைந்து ஆறாக ஓட எத்தனிக்கின்றன!
உன்திருமுகம் காணவென உனது வீட்டைச் சுற்றிசுற்றி
வந்து என்கால்கள் வலுவிழந்து விட்டன!
வாழ்வின் கடைசிவரை உன்கூட
வரப்போகின்ற என்நிஜமான காதல் என்னும்
உறவை மறுத்து, இடையிடையே பிரிந்து செல்லப்போகின்ற
உன்குடும்ப உறவின் பிடியில் நின்று கொண்டு
என்னை உன்மௌனப் பார்வைகளால்
கொல்கின்றாய்?
ஆனால், நானோ இன்று இல்லையெனினும்
நாளையாவது என் காதலை நீ புரிவாய்
என நாளை, நாளை என மீண்டும் மீண்டும்
என்மனதிற்கு தவணைகளை
கொடுப்பதையே வழக்கமாக்கி கொண்டு விட்டேன்!
இப்பொழுது எல்லாம் என்கண்களால் யாரைப்
பார்த்தாலும் அவர்கள் நீயாகவே தெரிகின்றாய்!
என்வார்த்தைகள் உன்னுடன் பேசவே முயல்கின்றன!
என்இதயமோ உன்பெயரையே சொல்லி அடித்து கொள்கின்றது!
கண்களை மூடினால் கண்மணிக்குள் உன்விம்பம் குவிகின்றது!
கனவுகள் எல்லாம் உன்னுடனேயே கழிகின்றன!
இவ்வாறாக என் நினைவுகள், உடல், பொறி, ஆவி
எல்லாம் உன்நினைவாகவே இயங்குகின்றன.
காதலின் கடைசி நிலையை நான் அடைந்து விட்டேன்
எனநினைக்கின்றேன்!
இனியும் என்னால் காதல் வலி தாங்க முடியாது
எனவே என்னை காதல் செய்ய விரும்பி வா !

– க.பரணீ –

## வழிதேடும் விழிகள்

நாங்களும் மனிதர்கள் தான்
எத்தனை எண்ணங்கள்
எம் இதயங்களில்
அணு அணுவாய் பெருகிக் கொள்கிறது
தோல்வியை அல்ல வெற்றியையே
செம்மைப்படுத்திக் கொள்கிறோம்
ஏழையானாலும் கோழையாகாதே
முதியோர் வகுத்த முன்மொழி
மலைகளென்ன கடல்களென்ன
எங்கும் எம்கால்கள் நடைபோடும்
அரை வயிற்றுக் கஞ்சிக்காய்
ஏழைக்குடிசையில் நாளும் பொழுதும்
வெள்ளி நிலவே விளக்காய் எரியும்.

பணத்தையே மெத்தையாக்கி
பாரினில் புதுமை தேடும் மனிதர்களே
உங்களுக்காய் வியர்வையே வடியும்
ஏழை மனிதர்கள் நாம்.
நாங்களும் புதுமை தேடுகிறோம்
நவீன யுகத்தில் நம்மினம்
நல்வாழ்வு பெறுதல் வேண்டும்
விந்தைகள் பல காட்டி
உலகமே வியத்தல் வேண்டும்
என்றோ ஒரு நாள் எமக்கும் விடிவுண்டு
நாமும் தலை நிமிர்த்தி
நானிலம் போற்றும் நல்வழியில்
வாழ்ந்திடுவோம்.

– சி.இன்பராஜ் –

## நெஞ்செரிவு தீர்ப்பதார்?

துச்சமாயெம் மைத்தூக் கியெறிந்து துன்பஞ்செய்த
மச்சம் நிறைமா கடல்மிக்க - அச்சமே
நாளும்தந் தெங்களைநோய் செய்ய நலிந்தோமே
பாழும் கடலென்று நொந்து.

வாழ்வில் வசந்தமும் வாழ்விடமும் போனதே
சூழ்ந்தளம் சுற்றமும் தேய்ந்ததே - ஆழ்ந்து நாம்



துக்கவழி போய்க்கிடக்க நோய்செய்யச் சூழ்ந்ததே
மக்களெம் நெஞ்சில் இருட்டு.

இருட்டாய் இருந்தநெஞ்சம் மிகக் கனன்று
பெருநெருப்பாய்த் தோன்றிட எங்கள் - உருவம்
கருப்பாய் மெலியக் கவலை மடியில்
பருப்பாய்க் கிடந்தோம் படுத்து

படுத்துக் கிடந்து மனம்மிகச் சோர்ந்தே
அடுத்தவ ரோடு கதைத்தலின்றி -கோடுபோட்டு
ஏக்கம் தனிலேயென்றும் கிடந்து ஆக்கமின்றி
நோக்கமின்றி வாழ்ந்தோம் உடைந்து

தேக்கிய துக்கம் மிகவோங்கி நெஞ்சதை
வாங்குவாங் கென்றுவாங்கச் சோர்ந்துநாம் - தூங்கவழி
இன்றித் துவண்டோம் துடித்தோம் உலகதிலே
இன்பின்றி நின்றோம் தனித்து

மொத்தமாய் வந்துதுன்பங் குந்திட முழ்கியதுள்
சித்தமது நற்தெளிவற் றேகுழும்ப - செத்தவராய்ப்
போனோமை யோதசாப்தம் தாண்டி யெமைநலித்த
போரில் அனர்த்தம் பெரிது

பெரிதும் புலம்பும் எமக்குநற் பேறும்
அரிதிற் கிடைக்குமோநீர் தந்த - அரிசியால்
பானையால் பாலால் பருப்பால் மறையலையே
யானை யெனக்கனக்கும் துன்பு

இருளிலே தோய்ந்து கிடந்தோம் எனினும்
மருந்தறியோம் மீண்டெழ அம்மா - ஒருதரேனும்
கைதந்தால் பற்றிக் கவலை துடைத்தெழுவோம்
காலத்தையும் வெல்வோம் களித்து

– நா.நவராஜ் –

## சுயமிழக்காமல் இனியும்...

முகவரி இல்லாவிட்டாலும்
இன்னுமென் முகம்
சுயமாகவே உங்கள் முன்!
ஆற்றுப்படுத்த
ஆளிழில்லாமல் உடைந்தழுத
கணங்களிலும்,
தோற்றுப்போன போதில்
தோள் பற்ற
உறவில்லாத - அந்த
தினங்களிலும்,
உடைப்பெடுத்த விழிகளை
ஒப்பனைக்குள்
உருமறைத்துக்கொள்ள
முனைந்ததில்லை!
சுகம் பெற
சுயம் இழக்கும்
பல முகங்களையும்,
அகம் முழுவதும் - கேலி
ஆலாபனைகளோடு
அர்ச்சிக்கும் சில முகங்களையும்
கடக்கையில் எதற்காகவோ
அழுந்திக் கொள்வதுண்டு
எனக்குள் நான்!
வாழும் சில காலம் கடந்தும்
வாழும் என்முகம்!
நம்பிக்கையில் - இனியும்
சுயமிழக்காமல்.....

நெற்கொடிதாசன்

## புரிதல்

தன்னை,உணர்வை,உறவை
பிறரை,சமூகத்தை,காலத்தை
உலகத்தைப் புரியாதவன்
மானிடப் பிறப்பல்ல
ஏதேனும் ஒன்றைப்
புரிய முற்பட்டாலே
முழுமையும் வெளிச்சம் பெறும்.

– பொன்மணி –

## தீக்குச்சி அல்ல

பூக்களின் மரணத்தில் தான்
எமக்கு பாவ மன்னிப்பு
தெய்வத்தின் திருப்பாதத்தில்
பக்தி மரணம் அவற்றிற்கானது
நெஞ்சிற்கும் முதுகிற்கும்
உள்ள இடைத்தூரம் தான்
வீர மரணத்துக்கும்
வீண் மரணத்துக்குமான வித்தியாசம்.
மரணம் வலி தருவது என்பது
அனுபவ மொழியல்ல!
வெறும் ஊகம் மட்டுமே!
ஆனால் ... என் மரணம்
இன்னொருவருக்கு
வலி உணர்த்துவதை விட
வலிமையை தருமென்றால்...



சாதிக்க வைக்கும் எழுச்சியை
சரித்திரம் படைக்கும் புரட்சியை
சமுதாயம் உயரும் போதனையை
தருமென்றால்..
ஊகங்களை உண்மையாக்குவதற்காக
மரிக்க விரும்பிறேன்.
தேடல்களுக்கு தீனி கிடைக்காத
தீக்குச்சியாக தீய்ந்து விடுவதிலும்
ஒளிதரும் மெழுகின் திரியாய்
உருக விரும்புகிறேன்.
பிறர்க்குதவாத அவசர மரணம்
தீக்குச்சிகளானது.
தன்னையேயுருக்கும் அவல மரணம்
மெழுகிற்கானது
நாள் நேரம் குறித்து
தேடிப்போய் வீழ்வதில்
மேனியில் வெடி சுமப்பவர்களும்
மெழுகுதிகள்தான்
ஒளியின் வருகைக்காய்
உருகும் திரியைப் போல்
விடியலின் விளைச்சலுக்காய்
வீழும் விதைகள் இவை
மார் தட்டிச் சொல்கின்றேன்.
அவர்கள்
தீக்குச்சி அல்ல!

– அபிதவன் –

## தேடினேன் தெரிந்தது



அன்பைத் தேடினேன்
அம்பு தெரிந்தது
ஆதரவு தேடினேன்
அரவம் தெரிந்தது
மனசைத் தேடினேன்
மரம் தெரிந்தது
மண்ணைத் தேடினேன்
சாம்பல் தெரிந்தது
ஒளியைத் தேடினேன்
இருள் தெரிந்தது
வானைத் தேடினேன்
சகதி தெரிந்தது
ஆசையைத் தேடினேன்
அதிகாரம் தெரிந்தது
உறவைத் தேடினேன்
சடலம் தெரிந்தது
என்னைத் தேடினேன்
கண்ணீர் சொரிந்தது

– யாழவள் பத்மநாதன் –

## அன்பான சகோதரனே!

அருவருப்பான குரலில்- அந்த
முதியவரைப் பார்த்து நீ
கஞ்சன் என்கின்றாய்
உண்மை அதுவல்ல
நீதான் செலவாளி
சில்லறை விலையில் - நீ
வாங்குவதெல்லாம்
சிகரெற் அல்ல
சின்னச் சின்ன சவப்பெட்டிகள்!
சீக்கிரம் தீர்ந்து விடும் உன்
கையிருப்புக்கள்
காலமெல்லாம் தனவந்தராய்
முதிர்ந்தாலும் இளையவராய் - அவர்
இருப்பார்
கைநீட்டி நீகேட்டால்
கலங்காமல் கடன் தருவார்
அவர் பெயரோ இப்பொழுது முதலாளி
உன் பெயரோ கடனாளி
தொடராதே உன் விளையாட்டை
ஏனெனில்
கடனாளிகள் கழுத்தில் சுருக்கிட்ட
வரலாறுகள் தான் அதிகம்

– சு.சுரேஸ்குமார் –

## இன்னோர் ஈழப்போர்

வெறிபிடித்த இனவாதிகளுக்கு
போர்தான் முடிவெனில்
பிரிவுதான் நிரந்தரம்
ஈழப்போரில்
உலகமே அறிந்து கொண்ட
வெற்றிகளை
எண்ணிவிட முடியாத போது
இனியும் போரானால்
வெற்றிகள் தான்
முடிவாகும்.

– கு.குமணன் –



# விக்னேஸ்வரன் கொலைச் சம்பவம்; எதிரியின் கோழைத்தனமான செயலே!

## வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

மன்னார்—

தமிழ்த் தேசியத்துக்காக துணிச்சலுடன் குரல் எழுப்பி வந்த திருகோணமலை மாவட்ட தமிழ்ப் பேரவைத்தலைவர் வ.விக்னேஸ்வரனின் அகால மரணச் செய்தி கேட்டு பேரதிர்ச்சியடைந்தேன் என வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்லநாதன் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட தமிழ்ப் பேரவைத் தலைவர் மரணம் தொடர்பாக பத்திரிகைகளுக்கு வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

திருகோணமலைப் பிரசேத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக அரச படைகளாலும், பேரினவாதிகளாலும் மேற்கொள்ளப்பட்ட அனைத்து அடக்குமுறைச் சம்பவங்களுக்கும் எதிராகக் குரல் கொடுத்தது மாத்திரமல்லாமல் திருகோணமலை மாவட்ட தமிழ் பேசும் மக்களை ஒன்று திரட்டி அடக்குமுறைகளையும் அடிமை விலங்கை அறுத்தெறிய வேண்டுமென பல இலட்சக்கணக்கான மக்கள் குரல் வாயிலாக ஒலிக்கச் செய்த பெருமை இவரையே சாரும்.

தனக்கு உயிராபத்து உண்டு என்பதை அறிந்து கயவர்கள் தன்னைத் தொடர்ந்து வருவர் என்பதை தெரிந்தும் கூட, இந்த பெருமகனார் மௌனியாகவில்லை. இவரது குரலை ஓயச் செய்து விட்டால், திருகோணமலை தம் வசமென ஒரு சில கயவர்கள் சிந்தனை கொண்டதன் பேரிலேயே இப்படிப்பட்ட கோழைத்தனமான செயலில் இறங்கியுள்ளார்கள் என்பது தெளிவு.

இந்தக் கொலைச் சம்பவம் நடைபெற்ற இடம் அதியுயர் பாதுகாப்பு வயைத்துக்குட்பட்டது என்பது மாத்திரமல்லாமல், வங்கிக்கு முன்னால்10 மீற்றர் தூரத்தில் உள்ள காவலரணில் 24 மணிநேரமும் உசார் நிலையில் இராணுவத்தினர் இருப்பதும், பலர் வங்கிக்கு சென்றாலும் காவலரண் ஊடாகவே செல்ல வேண்டுமென்பதும், 100 மீற்றர் தொலைவில் வீதித் தடையுடனான பொலிஸ் சோதனைச் சாவடியிலிருந்து 50 மீற்றர் தொலைவில் கடற்படையினரின் சோதனைச் சாவடி. அடுத்து 50 மீற்றர் தூரத்தில் துறைமுகப் பொலிஸாரின் சோதனைச் சாவடி. இப்படி காவலரண்கள் அனைத்தையும் கடந்து கொலையாளிகள் தப்பிச் செல்ல முடியுமானால் அரச படைகளின் ஒத்துழைப்புடனேயே இந்தக் கொலைச் சம்பவம் நடந்துள்ளது என மக்கள் சந்தேகப்படுவதில் நியாயமிருப்பதாகவே தோன்றுகிறது.

மற்றைய கொலைச் சம்பவங்கள் போன்று இந்தவிடயத்தையும் தட்டிக் கழிக்கவே நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்பது வெளிப்படும் அறிக்கைகள் மூலம் காணக்கூடியதாகவுள்ளது.

வன்னி வாழ் மக்கள் சார்பில் இந்தப் படுகொலையை வன்மையாக கண்டிக்கிறேன். இப்படிப்பட்ட அரசியற்படுகொலைகள் தொடர விடப்படுமானால் இனப்பிரச்சினைக்கு அரசியற் தீர்வு ஏற்படுமென்பது எட்டாக்கனியாகி விடுமெனக் கருதுகிறேன்.

இவரது கொடூரச் சாவால் அதிர்ச்சியுற்று சோபை இழந்திருக்கும் திருகோணமலை வாழ் மக்கள் அனைவருக்கும் - அன்னாரின் மனைவி, பிள்ளைகள் அனைவருக்கும் வன்னி மக்கள் சார்பில் எனது அனுதாபத்தைத் தெரிவித்து கொள்கின்றேன் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(மோ)

## பொன்விழா

வட்டக்கச்சி—

வட்டக்கச்சி உப தபாலகத்தின் பொன்விழா எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 10 மணிக்கு உப தபாலதிபர் திருமதி.ச.றோகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.


இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அன்றைய தினம் உப தபாலகத்தால் நடத்தப்பட்ட போட்டியில் பங்குபற்றிய வட்டக்கச்சி மகாவித்தியாலயம், இராமநாதபுரம் மகாவித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்குதல், பொன்விழா மலர் வெளியீடு என்பன இடம்பெறவுள்ளன. (09)

## பேரூந்து தரிப்பிடம் புனரமைப்பு!

மன்னார்—

மன்னார் - இலுப்பைக்கடவைக் கிராமத்தில் காப் நிறுவனத்தின் நிதியுதவியுடன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் 70 ஆயிரம் ரூபா செலவில் பேரூந்து தரிப்பிடம் புனரமைக்கப்பட்டு வருகிறது. (கு)



கிளிநொச்சி - ஐயனார்புரம் கலைவாணி முன்பள்ளி திறனாய்வு நிகழ்வில் விழாச்சுடரை கிளிநொச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் எஸ்.விஜயானந்தன் ஏற்றிவைப்பதைப் படத்தில் காணலாம்.

படம் - கு.கிருஷ்ணா

# புலமைப் பரிசில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வும், பரிசளிப்பு விழாவும்!

முல்லைத்தீவு—

தரம் 5 புலமைப் பரிசில் தேர்வில்100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற துணுக்காய் வலய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வும், பரிசளிப்பும் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முல்லைத்தீவு, மாங்குளம் மகாவித்தியாலயத்தில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பரந்தாமன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச் சுடரை தமிழீழ கல்விக் கழக பொறுப்பாளர் வெ.இளங்குமரன், தமிழீழ மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செ.முகுந்தன் துணுக்காய் வலய கல்விப் பணிப்பாளர் குரூஸ் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக் கொடியை மாங்குளம் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சரவணன் ஏற்றிவைத்தார்.

வரவேற்புரையை ஒட்டுசுட்டான் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜெயபாலன் நிகழ்த்தினார். தொடர்ந்து கருத்துரைகளை துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் குரூஸ், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் முகுந்தன், வணிக ஒன்றியத் தலைவர் வெற்றியரசன் ஆகியோர் வழங்கினர்.

சிறப்புரையை தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் நிகழ்த்தினார்.

100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற மாணவர்களுக்குப் பதக்கங்களும், தமிழீழ வைப்பகத்தின் அமுதம் தேட்டக்கணக்கு கையேடும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (கு)

# உருத்திரபுரம் - சிவநகர் கிராமத்தில் முன்பள்ளிக்கான கட்டட திறப்பு விழா!

கிளிநொச்சி—

கிளிநொச்சி - உருத்திரபுரம் சிவநகர்ப் பிரதேசத்தில் புதிய முன்பள்ளித் திறப்பு விழா - கடந்த புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றது.

அகதிகள் புனர்வாழ்வு நிறுவன நிர்வாகசபைத் தலைவர் பரஞ்சோதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - மங்கள விளக்கேற்றல் மற்றும் தேசியக் கொடி, தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடி, முன்பள்ளிக் கொடி என்பன ஏற்றிவைக்கப்பட்டதைத் தொடர்ந்து, முன்பள்ளி மாணவர்களான யோ.கீர்த்திகா தமிழ் மொழியிலும், துர்க்கா ஆங்கில மொழியிலும் வரவேற்புரை நிகழ்த்தினர்.

ஆசியுரையை கிராம அலுவலர் வைத்தீஸ்வரமூர்த்தி நிகழ்த்தினார்.

முன்பள்ளிக் கட்டடத்தின் பெயர்ப் பலகையை போரூட் நிறுவனப் பிரதிநிதியான ஏ.பீரா திரைநீக்கம் செய்து வைத்தார். மண்டபத்தை போரூட் நிறுவனத்தின் பிரதிநிதி சு.யு.எரிக்ஷன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். அலுவலகக் கட்டடத்தை அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் கணேசபிள்ளை நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இதேவேளை பூங்கா செயற்பாடுகளும், சிறுவர்களுக்கான விளையாட்டுக்களும் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த நிகழ்வில் கட்டடவேலைகள், வர்ணப் பூச்சு வேலைகளை மேற்கொண்டவர்களுக்கும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்தி பிரிவைச் சேர்ந்த லோ.ரேணுகா, கிளிநொச்சி பிரதேச முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கட்டமைப்புத் தலைவர் க.ஜெனார்த்தனன், அகதிகள் புனர்வாழ்வு நிறுவன இணைப்பாளர் ந.சௌந்தரநாயகம், மாவட்ட பணிப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (கு)

# பொது சுகாதார அதிகாரிகள் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்!

வவுனியா—

வவுனியா - திருநாவற்குளம் பகுதியில் கட்டாக்காலி நாய்களை அழிப்பதற்கு சென்ற பொது சுகாதார அதிகாரிகள் மீது அந்த பகுதி இளைஞர் குழுவினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன் காரணமாக நான்கு பேர் காயமடைந்துள்ளதுடன் வவுனியா பொது மருத்துவமனையில் தொடர்ந்து ஒருவர் சிகிச்சை பெற்று வருகிறார். தற்போது இருக்கும் வெப்ப காலநிலைக்கு வீதிகளில் திரியும் நாய்களுக்கு விசர் பிடிக்கும் என்பதற்காக அவற்றை அழிக்க பொது சுகாதார அதிகாரிகளும், வவுனியா நகர சபை ஊழியர்களும் பகுதிக்குச் சென்று உள்ளனர்.

வளர்ப்பு நாய்களுக்கு மருந்து வைத்துக் கொலை செய்வதாக கருதி வந்த நபர்களே இவர்களின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன் பின்னர் சுகாதார அதிகாரி செயலகம் மீது தாக்குதல் நடத்தி, அதன் கண்ணாடிகளும் நொருக்கப்பட்டன. இந்தச் சம்பவத்தில் காவலாளியும் தாக்கப்பட்டுள்ளார். (கு)



கிளிநொச்சி - வட்டக்கச்சி மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியை முன்னிட்டு - கிளிநொச்சியிலிருந்து வட்டக்கச்சி மகாவித்தியாலயம் வரை நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியின் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம்.

படம் - ம.இந்துமதி

## தமிழீழ சுகாதார நடைமுறைச் சட்டம்

கிளிநொச்சி—

தமிழீழ சட்டவாக்க செயலகத்தால், தமிழீழ சுகாதார நடைமுறைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. தமிழீழ நீதி, நிர்வாகத் துறையின் தமிழீழ சட்டவாக்கச் செயலகத்தால் 2006 ஆம் ஆண்டின் மூன்றாம் எண் சட்டமாக இது வெளியிடப்படவுள்ளது.

இந்தச் சட்டத்தில் தனியார் மருத்துவமனைகளின் அமைப்பு, மருந்து கையாளும் நிலையங்கள், மருந்தகங்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள், உணவு உற்பத்தி மையங்கள், உணவகங்கள் என்பவற்றின் நடைமுறைகள் பற்றி விரிவாக எடுத்துக்காட்டப்படுகின்றது.

## மதுபான நிலையம் திறப்பு!

கிளிநொச்சி—

கிளிநொச்சி - பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் மதுபான நிலையம் இன்று காலை 12 மணிக்கு கட்சன் வீதியில் உள்ள அழகரட்ணம் வீதியில் திறந்து வைக்கப்படவுள்ளது

இந்த நிகழ்வு - சங்கத்தின் தலைவர் ப.இராமச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (09)

# மன்னார் மாவட்டத்தில் சர்வோதய கருத்தரங்கு

மன்னார்—

மன்னார் வை.எச்.சி.ஏ மண்டபத்தில் மன்னார் சர்வோதயத்தின் கிராம சுவராச்சிய அமைப்புக்களுக்கான கருத்தரங்கு கடந்த செவ்வாய்க் கிழமை சர்வோதய இணைப்பாளர் யுகேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கு கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த சர்வோதய அதிகாரிகளான - அபேநாயக்க குலசிறிவிதானகே, உபுல் குணவர்த்தன ஆகியோரால் நடத்தப்பட்டது.

காலை 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் - சுமார் 30 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

கிராமசுவராச்சிய அமைப்புகளை எவ்வாறு செயற்படுத்துவது? அதன் வேலைத்திட்டம் என்ன? என்பன பற்றி தெளிவுபடுத்தியதோடு, தலைமைத்துவத்துக்குமான கருத்தரங்காகவும் இது அமைந்தமை குறிப்பிடத்தக்கது. (மோ)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்குஇன்னா
பிற்பகல் தாமே வரும்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# நம்பிக்கையளிப்பாரா மகிந்த?

மாமனிதர் விக்னேஸ்வரனின் படுகொலையுடன் திருகோணமலை - மூதூரிலும், சிறுப்பிட்டியிலும் இடம்பெற்ற சம்பவங்கள் மீண்டும் டிசம்பர் - ஜனவரி மாத சூழலை ஏற்படுத்திவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் லண்டனில் நோர்வே விசேட தூதுவர் ஹன்சன் பௌயர் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுக்களையடுத்து ஜனாதிபதி மகிந்த சில இணக்கப்பாடுகளுக்கு வந்திருக்கிறார்.

மீளவும் கொந்தளிப்பானதொரு சூழல் உருவாவதற்கான அறிகுறிகள் தென்பட்ட நிலையில்தான் மகிந்த ராஜபக்ஷ இந்த இணக்கத்துக்கு வந்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்க விடயம்.

சில நாட்களுக்கு முன்னர் கூட எரிக் சொல்ஹெய்மும், ஹன்சன் பௌயரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியபோது இந்த இணக்கத்துக்கு வர அவர் தவறியிருந்தார்.

ஆனால், அழிவிழுப் போவதற்கான அறிகுறிகள் தென்பட்டவுடன்தான் - இவ்வாறு செயற்பட முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து ஒன்று விளங்க முடிகிறது. தமிழரின் பலமே அவர்களின் ஆயுதங்களில்தான் தங்கியுள்ளது.

அதேவேளை, நோர்வே ஊடாக விடுதலைப் புலிகளுக்கு இரண்டு, மூன்று வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறார் மகிந்த. இவை முக்கியமானவை.

ஜெனிவாவில் நடைபெற்ற முதற்கட்டப் பேச்சுக்களில் எட்டப்பட்ட இணக்கப்பாட்டை அரசு தனது அதிகாரத்துக்குட்பட்ட வகையில் நடைமுறைப்படுத்தும் என்பது முதலாவது.

இதிலிருந்து ஜெனிவா இணக்கப்பாட்டைஅரசு இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை என்ற ஒப்புதல் வாக்குமூலத்தைக் கொடுத்திருக்கிறார் அவர். மகிந்தவுக்கு இருக்கும் நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் எதையுமே செய்ய முடியும்.

ஜே.ஆர். ஒருமுறை சொன்னதாக ஞாபகம் - ஆணைப் பெண்ணாகவும், பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர மற்றெல்லாவற்றையும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி மூலம் தன்னால் செய்ய முடியும் என்று.

ஜே.ஆர். பெற்றிருந்த அதே நிறைவேற்று அதிகாரங்களைத்தான் இன்று மகிந்தவும் வைத்திருக்கிறார். எனவே, அரசாங்கத்தின் அதிகாரத்துக்குட்பட்டவைகளைச் செய்வதாக மகிந்த கொடுத்த வாக்குறுதி, எதையும் செய்ய முடியும் என்ற அர்த்தம் பொதிந்ததாகவே இருக்க வேண்டும். ஆனால், மகிந்த அப்படிச் செய்வாரா என்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

அடுத்ததாக - அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடைபெறும் படுகொலைகள், அடாவடித்தனங்களைக் கட்டுப்படுத்த, துணை ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கு படைத்தளபதிகளிடம் உத்தரவிட்டிருப்பதாகவும் மகிந்த உறுதிகொடுத்திருக்கிறார்.

இதன்மூலம், மகிந்த ராஜபக்ஷவும் துணை ஆயுதக்குழுக்களின் செயற்பாடுகளை மீண்டும் அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியிருக்கிறார். ஆனால், முன்னரும் ஜெனிவாவில் துணை ஆயுதக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிவிட்டு இங்குவந்து அப்படிக் கூறவில்லை என்று தடம்புரண்டதைப் போல மகிந்தவும் தடம்புரள மாட்டார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

அதேவேளை, முக்கிய சிக்கல்களைத் தீர்க்கும் வகையில் மகிந்தவின் வாக்குறுதிகள் அமைந்திருப்பதாகவே கருதப்படுகிறது.

ஆனால், சிங்களத் தலைமைகள் வாக்குறுதிகளைக் கொடுப்பதும், பின்னர் அதிலிருந்து விலகிக் கொள்வதும் ஒன்றும் புதிய நடைமுறைகள் இல்லையே! அதனால் மகிந்தவின் வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படுமா என்பதையும் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

அதேவேளை, ஜெனிவாப் பேச்சுக்களுக்கு இன்னும் சுமார் ஒரு வாரமே உள்ள நிலையில் மகிந்த தனது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாகப் புலிகளை நம்பவைக்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

அடுத்த சில நாட்கள் மகிந்தவுக்கு சவாலாகவே அமையப்போகிறது. ஏனெனில் தனது வாக்கு றுதிகளை நிறைவேற்றுவதாக மகிந்த புலிகளை நம்பவைத்தால் தான் பேச்சுக்களுக்கு அவர்கள் செல்வர்.

அந்த நம்பிக்கையை மகிந்த ஏற்படுத்துவாரா என்பதே இப்போதுள்ள கேள்வி.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

## நாடும் நடப்பும்




# அமைதிப் படையுடன் வெளியேறியவர்களின் கொள்ளைச் செயலே இன்றும் நடைபெறுகிறது!

## ஊர்சுற்றியார் எழுதுவது

இந்திய அமைதிப்படை ஈழத்திலிருந்து வெளியேறிச் சென்ற காலம் உமக்கு நினைவிருக்கிறதா? என்று கேட்டபடி வந்தமர்ந்தார் நண்பர் பரதேசியார்.

நன்றாக நினைவிருக்கிறது. இதை ஏன் எதற்காக இப்பொழுது கேட்கிறீர் என்று கேட்டேன்.

சரியாகக் கவனித்தீர் என்றால் அதே சூழ்நிலையைப் பார்க்கலாம் என்றார் நண்பர்.

யாழ்ப்பாண நகரிலும் பொதுவாக ஈழத்தின் பல இடங்களிலும் ஆயுதங்களுடன் வீடுகளுக்குள் நுழையும் குழுக்கள், வீட்டுக்காரரர்களை மிரட்டியும், வீட்டுக் கதவு - ஜன்னல்களை உடைத்து நொருக்கியும், வீட்டிலுள்ளவர்களை ஆயுதங்களைக் காட்டி மிரட்டியும் தங்க ஆபரணங்களையும், ரொக்கப்பணத்தையும் கொள்ளை அடித்துச் செல்கிறார்கள். சில இடங்களில் வீட்டிலுள்ளோர் எதிர்ப்புக் காட்டியபோது அவர்களுக்கு வாள் வெட்டும் விழுந்திருக்கிறது. மூன்று நான்கு தினங்களுக்குமுன் திருநெல்வேலிப் பகுதியில் மூன்று வீடுகளில் இப்படி நடந்த கொள்ளைகள் பற்றி நான் முன்பே எழுதியிருந்தேன். இதன் பின் நல்லூரடியில் சில வீடுகளில் இப்படி ஆயுததாரிகள் கொள்ளையடித்திருக்கிறார்கள். கொள்ளையரின் அட்டகாசத்தைக் கண்டு வீட்டுக்காரரர்கள் குரல் கொடுத்தபோது அயலிலுள்ளவர்கள் உதவிக்கு வரமுயன்றபோது வீதிகளில் ஆயுதங்களுடன் நின்றவர்கள் மிரட்டித் தடுத்திருக்கிறார்கள். பாதுகாப்புப் படைகளின் முகாம்கள் வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி அமைக்கப்பட்டிருக்கும் யாழ்ப்பாண நகரிலேயே இப்படிக் கொள்ளைக் கோஷ்டிகள் ஆயுதங்களுடன் இரவில் நடமாடுவதென்றால் இதன் அர்த்தம் என்ன? இதற்கும் அமைதிப் படை வெளியேறிய காலத்தி லிருந்த சூழ்நிலைக்கும் என்ன சம்பந்தம் என்று நான் கேட்டேன்.

இந்திய அமைதிப்படை இங்கிருந்து வெளியேறப்போகிறதென்ற காலக்[illegible]டு தெரியவந்து அந்த நாளும் நெருங்கிக் கொண்டிருக்கை[illegible]ல் இங்கு அமைதிப் படையின் நிழலில் தங்கியிருந்த ஆயுதக்குழுக்கள் - வீடுகள், கடைகளிலும் புகுந்து கொள்ளையடிக்கத் தொடங்கியதுடன் வீதியில் சென்றவர்களிடம் வழிப்பறிக் கொள்ளைகளிலும் ஈடுபட்டனர். இதனால் யாழ்ப்பாணத்தில் கன்னாதிட்டியில் நகைக் கடை வியாபாரிகள் தங்கள் நகைக்கடைகளையே இந்த அமைதிப்படை நாட்டை விட்டுப் போகும்வரை பூட்டிவைத்திருந்தனர். இதற்கு முன் நகைத் தொழிலாளர் சிலரிடம் இந்தக் கொள்ளைக் கோஷ்டியினர் கொள்ளையடித்ததைத் தொ[illegible]தே நகைக் கடைகளை அவர்கள் பூட்டி வைத்தனர் என்று பரதேசியார் சொன்னார்.

நீர் சொல்வது சரி. எனக்கும் அது நினைவிருக்கிறது. ஆனால் இன்று அமைதிப்படை இல்லை. இலங்கை அ[illegible] படைகள்தான் மூலைக்கு மூலையும், சந்திக்குச் சந்தியும் முகாம் அமைத்துப் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருக்கின்றன. சில இடங்களில் தமிழீழத்தின் சில பகுதிகளில் இந்த அரச படைகளின் முகாம்களுக்கு அருகில் அல்லது அவர்களின் கண் பார்வையில் ஆயுதக் குழுக்களின் அலுவலகங்களும், முகாம்களும் பலத்த பாதுகாப்பின் மத்தியில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த முகாம்கள் எப்படி இங்கிருந்து வெளியேறப் போகின்றன என்று நான் கேட்டேன்.

ஜெனீவாவில் அரசுக்கும்- விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்த அமுல் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தை நடந்ததல்லவா? இந்த முதலாம் சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஆயுதக்குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும் என்று ஒப்பந்தத்தில் உடன்பட்டிருந்ததுடன், ஆயுதங்களைக் களைய வேண்டுமென்று புலிகள் எடுத்துக் கூறினர். இதை மாநாடு ஏற்றுக்கொண்டது. மாநாட்டிலிருந்து திரும்பியதும் இந்த முடிவுக்கு மாறாகப் பொலிஸ்மா அதிபர், பாதுகாப்புச் செயலர் ஆகியோர் கருத்துத் தெரிவித்தனர். இதை நம்பி ஆயுதக் குழுக்களும் தமிழீழத்தில் தங்கள் இருப்பைப் பலப்படுத்தும் செயல்களில் ஈடுபட்டன. தாங்கள் ஆயுதங்களைக் களைய முடியாதென்றும் முதலில் விடுதலைப் புலிகள் ஆயுதங்க்ளைக் களையட்டும் என்றும் வீராப்புப் பேசினர். சில அரசியல்வாதிகளும் இவர்களுக்குச் சார்பாகக் கருத்துத் தெரிவித்தனர். இந்த நிலையில் ஜெனிவா மாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்டபடி குழுக்களின் ஆயுதங்களை அரசு களையப்போகிறதா? இல்லையா? என்று புலிகள் கேட்டனர். முதல் சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்டவைகளை நிறைவேற்றாமல் இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் கலந்து கொள்வதில் அர்த்தமில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்தனர் என்று பரதேசியார் சொன்னார்.

இந்தச் சமயத்தில்தான் கண்காணிப்புக்குழுத் தலைவர் பதவியிலிருந்து விலகிச் சென்ற ஹொக்லண்ட் தெரிவித்த கருத்துக்களும் அரசின் கவனத்தை ஈர்க்கச் செய்தது. ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களை அரசு களையத் தவறினால் - விடுதலைப் புலிகளே அவர்களின் ஆயுதங்களைக் களைய நேரிட்டால் நிலைமை மோசமாகும் என்று விடுத்த எச்சரிக்கையும் அரசுக்குச் சற்று உறைத்திருக்க வேண்டும். ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டு அவை செயல்படுத்தப்படவிருப்பதற்கான சமிக்ஞைகள் ஆயுதக்குழுக்களுக்குக் கிடைத்திருக்க வேண்டும். இல்லையேல் ஆயுதக்குழுக்களின் ஆயுதங்களைக் களைவதற்குப் புலிகளே முன்வரக்கூடும் என்ற அச்சமும் ஏற்பட்டிருக்க வேண்டும். இதனால்தான் ஆயுதங்களை அரசோ, புலிகளோ களைவதற்கு முன் தாங்கள் இந்தப் பகுதியிலிருந்து அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு தப்பிச்செல்வதற்கு இந்தக் குழுவினர் தயாராகி விட்டதாகத் தெரிகிறது என்று நான் சொன்னேன்.

ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு அரச அதிபர் மகிந்த ராஜபக்ஷ உத்தரவு பிறப்பித்துவிட்டதாகவும், ஜெனீவா தீர்மானப்படி ஆயுதங்களைக் களைய நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் விடுதலைப் புலிகளுக்கு அறிவிக்கும்படி தெரிவித்துவிட்டாரென்றும் நேற்றைய பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன. ஆயுதங்களைக் கொடுப்பதற்கு முன்னரே இந்த ஆயுதங்களைப் பயன்படுத்திச் சுருட்ட வேண்டியதைச் சுருட்டவும் சிலர் முனைந்திருக்கலாம். இல்லையெனில் மூலைக்கு மூலை முகாம்களில் தங்கியிருக்கும் பாதுகாப்புப் படையினர் இந்தக் கொள்ளைக் கோஷ்டிகளை மடக்கி[illegible]ருக்க முடியாதா? என்று பரமசிவம் கேட்டார். நல்லூரடிக் கொள்ளையில் ஈடுபட்டவர்களில் இருவர் பொலிஸாரிடம் அகப்பட்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவித்திருக்கின்றன. இவர்களைக் கொண்டு மற்றைய கொள்ளையர்களையும் பிடிக்கலாமல்லவா? முகத்தைக் கறுப்புத் துணியால் மூடிக்கொண்டு பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடக் கூடாதென்று யாழ்ப்பாண நீதிவான் பிறப்பித்த உத்தரவைக் கூடக் கவனத்திலெடுக்காது படையினர் நடந்து கொள்வ[illegible] கொள்ளையர்களுக்கும் வாய்ப்பாகிவிட்டதே என்று பரதேசியார் [illegible]ன்னார்.

யாழ்ப்பாணத்தில் கொள்ளையர்களின் அட்டகாசம் அதிகரிக்க அதிகரிக்க மக்களுக்கு விரக்தியும் வெறுப்பும் அதிகரிக்கிறது. பொலிஸாரும் பாதுகாப்புப் படையினரும் புலிக்கொடி எங்கேயாவது ஏற்றப்பட்டிருக்கிறதாவென்றுதான் பார்த்துத் திரிகிறார்களேயொழிய - திருடர்களையும், கொள்ளையர்களையும் பிடித்துத் தடுப்பதற்கு வரக்காணோம் என்று குமுறுகிறார்கள். இந்த நிலையில்தான் மக்கள் சிலர் விடுதலைப் புலிகளின் பண் ாட்டுப் பிரிவினர் மீண்டும் இங்குவந்து மக்களின் நலனுக்காகச் செயல்படமாட்டார்களா என்று பகிரங்கமாகவே கேட்கத் தொடங்கிவிட்டார்கள் என்று நான் சொன்னேன்.

இந்த ஆயுதக்குழுக்களில் பலவும் முன்பு அமைதிப் படையினால், இந்தியாவிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டுப் பின்னர் தம்முடன் கூட்டிச் செல்லப்பட்டவர்கள்தாம். பின்னர் இலங்கைப் படையுடன் இவர்கள் வந்து ஒட்டிக்கொண்டவர்கள். இலங்கை அரசுதான் இவர்களைப் பராமரித்து வந்திருக்கிறது என்று பரதேசியார் சொல்லிக் கொண்டு நடந்தார்.

# தாய்நாடெனும் உயரிய அர்ப்பணிப்பின் வடிவம்

**சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் 15 ஆம் ஆண்டு நிறைவு நாள் இன்றாகும். இதனை முன்னிட்டு இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.**



**தா**ய் நாடே எங்கள் உயிர் மூச் சென நினைத்தவராய் களம் விரைகின்ற போராளிகள் எத்தனை எத்தனையோ சுமைகளை சுமக்கவே செய்கின்றனர். இன்பம் என்ற சொல் லற்ற தமது வாழ்வு துன்பத்திலும், துயரத்திலும், சோகத்திலுமாக தொடர்வதை எண்ணி என்றுமே சிறிதளவும் கலங்கிடாத போராளிகள் களத்தையே தங்கள் வாழ்வாக மாற்றிக் கொண்டும் காவலரணும், எல்லையுமே தங்களின் ஆத்ம உயிரென நினைத்தவராய் நிதானமுடன், இலட் சியப் பாதையைத் தொடர்வது நியதியாகி விட்டது.

இலட்சியப் போர் என்றும், தாயக விடுதலைப்போர் என்றும் புறப்பட்டவரின் கதைகள் புதிய வரலாறாய் பின்னிக்கிடக் கின்றது. எந்தச் சூழலி லும் மாறுபடாத தங்களின் உயிரோட்டத்தில் ஐக்கியமான ஈழதேசத்தின் விடுதலைப்போர் ஒன்றே தங்க ளின் உயிரென நினைத்தவரின் கதைகள் சங்ககால வீர இலக்கியங்களையும் விட பல மடங்கு உயரியது என்பதை தமிழீழ தனியரசுக்கான விடுதலைப் போரில் பங்கேற்ற போராளிகளின் உண்மைக்கதை கள் எடுத்துக் காட்டுகின்றன. "அம்மா நான் இயக்கத்துக்குப் போறன்" என்று தன்னைப் பெற்ற தாயிடமே கூறி விட்டுச் செல்லும்



தனயனை ஏன்? எதற்கு? என கேட்காம லேயே அனுப்பி வைக்கும் அளவுக்கு ஈழத்தின் ஒவ் வொரு குடிமகனும் விடுதலையை நேசிக்கிறான் என்பது வரலாற்று உண்மையாகும்.

தாயக விடுதலை என்றதும் எல்லோரும் அணி சேர்வதும், ஏதாவது ஒன்றைச் செய்ய நினைப்பதுமாக ஒரு புரட்சிகர உயிரோட்ட முடன் துடிதுடித்து செயலில் இறங்குவதற்கு என்ன காரணமாகலாம்? என எதையும் தேடத் தேவையில்லை. கார ணம், பல தசாப்த காலமாக சிங்கள நாட்டினர் செய்த மிலேச்சத்தனமான கொடுமைகள் எமது இனத்துக்கு ஒரு புரட்சிகர உணர்வைத் தந் துள்ளது. அதுவும் புதிய தெம்புடன் புதிய உணர் வுடன் கூடிய தாயக விடுதலை என் னும் புரட்சிகர உணர்வையே தந்தது வரலாற்றின் இன்னுமொரு பக்கமாகும். ஒரு வீட்டுக்கு ஒருவராவது இயக்கத்தில் இணைந்து தாயக விடுதலைக்காகப் போராடவேண்டும் என்பது சமகாலத்தில் தமிழீழ தேசத் தில் பிறந்த ஒவ்வொரு மனிதனதும் பேரவாவாகும். அதைவிட தமிழீழத்தையும் கடந்து புலம் பெயர் தேசத்திலிருந்தும், தாயக விடுதலைப் போராட்டத்தில் இணையும் செயலும் அதிகரித்துவிட்டது உண்மையே.

நாம் ஒவ்வொருவரும் போராடியே எமது உயிரை பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற உணர்வு மேலீடானது எத்தனையோ சோகங்களிலும், துன்பங்களிலும், இழப் புகளிலும் பிரிவுகளிலிருந்தும் பிறந்ததே என்று உறுதிபடக்கூறலாம். பேரினவாதத்தின் ஆக்கிரமிப்புக் கரங்கள் தமிழீழத்துக்குச் செய்த மிகப்பெரும் கொடுமையின் சுயவடிவம் என்றும் சொல்லலாம். எதிரியின் கொடுமையை அடக்க உருவெடுத்த போராட்டமானது - பல சகாப்தத்தின் பின் இன்று பாரிய படைத்துறை வளர்ச்சியை எட்டியதற்குக் காரணம் தேசியத்தலைவரே என்பது அதிசயிக்கக்கூடிய உண்மை யாகும்.

தலைவரின் வழிநடத்தலில் ஆரம் பிக்கப்பட்ட வளர்ச்சியையும், வெற்றி யையும் பெற்றுத் தந்த மூத்த உறுப்பினர் களின் அயராத உழைப்பும், தாயகப்பற்றுடன் கூடிய உயிர்த்துடிப்பான செயற்திறனும் இன்றைய போராட்ட வெற்றிக்கு துணை நிற்கின்றன. அந்த அற் புதமான மூத்தபோரா ளிகளின் வீரச்செயல்களே ஆக்கிரமிப்பு எதிரிகளை நடுக்கமுறச் செய்தது.

இலட்சியப் பற்றே தங்கள் உயிரென நினைத்துக் களமாடிய அந்த வேங்கைக ளின் வரிசையில் முத ன்மையானவன் லெப். சீலன். இவன் வீரம், விவேகம், தாய கப்பற்று, தலைமை, நேசிப்பு என்பனவற்றை மிகையாகக் கொண்டவன் என்பது ஈழப்போராட்ட வரலாற்று உண்மை. இவற்றையும் விட 20 ஆம் நூற்றாண்டின் சிறந்த போர் வீரர்களில் ஒருவனாகவும், மிகுந்த துணிவுள்ளவனாகவும் கருதப்பட்டவன். 'என்னை சுட்டுவிட்டு என்னுடைய ஆயுதத்தை தலைவரிடம் கொண்டுபோய்க் கொடு' என்ற மிக உன்னதமான, துணிவான வார்த் தையை தனது உயிர்போகும் வேளை யிலும் உறுதியாகக் கூறி வீரச்சா வடைகிறான்.

லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி என்ற அந்த இணையில்லாத வீரனின் நாமம் தமிழர் வரலாற்றில் என்றும் ஒரு வீரகாவியமாக இருக்கவும், என்றும் மாறாத வீரப்பரம்பரை ஒன்று படைவல்லமை யுடன் தமிழர் வரலாற்றில் வளரவுமே அவனது பெய ரில் ஒரு படையணியைத் தலைவர் ஆரம்பிக்கிறார்.

வீரனுக்கு வீரத்தினூடே மதிப்பு வழங்க வேண்டும் என்ற நியதியின் அடிப் படையில் - களங்கமற்ற வீர னின் பெயரில் 1991-04-10 ஆம் திகதி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி என்ற முத லாவதும், மூத்ததுமான மரபுவழிப்படையணி யைத் தலைவர் ஆரம்பித்து வைக்கிறார். சீலன் என்னும் பெரும் வீரனின் வீரச்சுவட்டி லிருந்து கரு வுற்ற சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தமி ழீழ விடுதலைப் போரில் மட்டுமல்ல, தமிழன் வரலாற்றி லேயே முதலா வது மரபுவழிப் படையணியாகும். ஐயாயிரம் வருடத்துக்கு முந்திய சோழ சாம்ராஜ்ஜிய படைகளுக்குப் பிறகு உலகிலேயே தமிழனுக்கென முதலாவதாக உருவானதும், மூத்த தும் சிறப்புப் பெயர் கொண்டதுமான படையணி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி யாகும்.

சாள்ஸ் அன்ரனி என்ற துணி வான வீரனின் பெயர் தாங்கிய படை யணி சுமார் 15 ஆண்டு காலமாய் காவலர ணும், எல்லையும், பயிற்சி யும் என்றே தனது வீரத் தடத்தை பதித்து நிற்கின்றது. படையணியி லுள்ள ஒவ் வொரு போராளியும், வீரமும்,தீரமும் மிக்கவராய் கடமையை கண்ணெனக் கொண்டவர்களாய் பசி, பட்டினி, தாகம், இழப்பு என எதையும் பார்த்து சலித்துவிடாத சாதனை வீரர்களாய், தியாக உணர்வு கொண்ட, கொடை உணர்வு கொண்ட வர்களாய் காலமெல்லாம் களப் பணி களிலேயே ஈடுபட்டு வருகின்றதோடு, எதிர்ப்படும் களத்தில் எதிரியின் பாசறையை உடைத்தெறிய துணிந்தவர்களாய் அன்றும், இன்றும் களத்தி லேயே பணிபுரிவதோடு என்றும் தாயக விடுதலைப் போரின் வெற்றிக்காக தனது குருதியையோ, சதைத் துண்டையோ அன்றி உயிரையோ கொடுக்க, மிகுந்த உணர்வுடன் கூடிய ஆயத்தத்தோடு இருக்கிறார்கள் என்பது உண்மையே. சீலனின் வீரம் சொல்லியே - களம் விரைந்து எதிரி சேனையை அழித்து தம் உயிர் தந்த உத்தமர்கள் 1059 பேர் மாவீரரெனும் மகுடம் சூடி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியெனும் வீரத்துக்கு வித்திட்டு சென்றுவிட்டது தமிழனின் வீர வரலாற்று உண்மையாகும். தாய் நாடே தங்களின் ஒரே குறிக்கோள் என களம் விரைந்தோடி களத்தை எதிர்கொண்டு தங்கள் உயிரை தாயக இலட்சியத்துக்காக கொடையாகத் தந்த வீரமறவர்கள் ஆனார்கள்.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படை யணி என்பதில் சீலன் பெயர் மட்டு மல்ல அவனது மானமும், தலைவ ரின் மதிப்பும் ஒட்டுமொத்த தமிழினத் தின் மானமும், மதிப்பும் பிணைந்து கிடப்பதை ஒவ்வொரு போராளி யும் உணர்ந்தான். எனவே தான் அவர்க ளால் மித மிஞ்சிய எதிரியின் படைகளோடு போராடமுடிந்தது. சில இடங்களில் பல எதிரிக்கு ஒருவன் என்ற ரீதியில் சண்டைசெய்து எதிரிகளை துவம்சம், செய்து தமிழன் மானத் தைக் காக்கவென உயிர்



துறந்த வரின் வரலாறே பொதிந்து கிடக்கிறது.

15 ஆண்டுகால, களத்தோடு வாழ்வை இணைத்துக்கொண்டவர் வாழ்வில் எத்தனை எத்தனை சோக ங்கள் இருக்கிறது என்பதற்கும், எந்தச் சோகத்தையும் தனது இலட்சியப் பற்றுக்காக, படையணியின் மதிப்புக்காக, வீரத்துக்காக ஏற்பேன் என்பதை ஒருவன் தாங்கிக்கொள்ளும் விதத் தில் உள்ள மிக உயரிய அர்ப்பணிப் பைப் பாருங்கள். இயக்கத்தில் இணைந்ததிலிருந்து காணத் துடித்தும் காண முடியாது போன தனது தாய் இறந்து விட்டாள் என அறிகிறான். ஒரு படை யணிப்போராளி தனக்குத்தரப்பட்ட கட மையை வேறொருவரிடம் ஒப்படைத்து விட்டு, தாயின் இறுதி நிகழ்வுக்கு போகச் சொல்லி படையணி கட்டளை அதிகாரியிடம் இருந்து கட்டளை வருகிறது.

ஆனால் அந்தப் போராளியே தனக்குத் தரப்பட்டுள்ளது சண்டைப்பணிதான் இல்லாவிட்டால், வீண் இழப்புக்கள் ஏற்படும், வெற்றி கிடைக்காது என நினைத்தவ னாய் போக மறுக்கிறான்.

தனது தாயின் உயிரற்ற உடலை விட தனது தாய் நாட்டின் உயிர் உள்ள மண் பெரிதென நினைத்து தொடர்ந்து சண்டை செய்து பல நாட்கள் அந்தச் சண்டையை எதிர் கொண்டு வெற்றிபெறுகிறான். அதன் பின்பும் குறித்த கடமைக்குச் சென்று வந்தே தனது வீடு செல்கிறான்.

இப்படியாக வீரத்தின் சாட்சி சொல்லி தாய் நாட்டின்பற்றுடன் சுதந் திர விடுதலைக்காய்



போராடிடும் உய ரிய வீரர்களின் அர்ப்பணிப்பு என்பது மாவீரன் சீலன் பெயர் சொல்லி உரு வான வரலாற்றுப் பெருமைமிக்க தமிழரின் மூத்ததும் முதலுமான படையணி யின் வீரச்சுவட்டில் இருந்து எழுந்த உயரிய அர்ப் பணிப்பின் வடிவாகும்.

**க.மிரேசு**

## விய[illegible] புது வருடம் உங்களுக்கு எப்படி?

## மேடம்



மேடராசியில் பிறந்தவர்களுக்கு வருட ஆரம்பத்தில் " பொன்னவன்" எனப்போற்றப் படும் குருபகவான் 7ஆம் வீட்டிலிருந்து இலக் கினத்தை நோக்குவதால், பலவகையாலும் சிறப்பான பலன்கள் நடந்துகொண்டிருக்கும். 4ஆம் வீட்டில் சனியின் சஞ்சாரம் இருப்பதால், தேவையற்ற சிலநெருக்கடிகள் ஏற்பட்டாலும் தொழில், பொருளாதாரம் பாதிப்படையாது. உடல் நிலையில் சுறுசுறுப்பும், புத்துணர்வும் ஏற்படும். மனதில் உற்சாகம் உண்டாகும். குரு பகவான் வக்கிரத்தில் சஞ்சரிப்பதால் குடும்பத் தில் சிறு மருத்துவச் செலவுகள் காட்டும். கொடுக் கல்வாங்கல்களில் தளப்பம் இருக்காது. பிள்ளை களால் பெருமையும், உதவியும் கிடைக்கும் உறவினர்களுடனும் நண்பர்களுடனும் நட் புறவு சிறப்பாக இருக்கும். திருமண சுபகரு மங்கள் தடையின்றி நடக்கும். வீடு, மனை, வாகனம் என்பன சேரும். சில முக்கிய கரு மங்களில் தலைமை வகிக்கும் யோகமும் எற்படும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண் டாகும். பெரிய மனிதர்களின் ஆதரவு அமையும்.

28.10.2006 முதல் தன காரகனான குருஅஷ்டம ராசியில் சஞ்சரிப்பார். இக்காலம் பொருளாதார நெருக்கடிகளைத் தோற்றுவிக் கும். தேவையற்ற செலவுகள் உண்டாகும். எதிர்பார்த்த வரவுகள் தடைப்படும். எதிலும் அவதானம் தேவை. தேகசுகக் குறைவும், மன அமைதியும் குறையும். வீண் மருத்துவச் செலவுகள் காட்டும். பணச்செலவு அதிகமாகத் தோன்றுமாதலால் சிக்கனத்தைக் கடைப்பிடிப் பிடிப்பது நன்று. உறவினர்களிடத்திலும் மனஸ் தாபங்கள் தோன்றும். பிரயாணங்களில் செலவு அதிகமாகும். திருமண முயற்சிகளுக்கு பல இடையூறுகள் எற்படும்.

உத்தியோகத்தர்களுக்கு விரும்பியபடி உயர்வுகள் சிறப்பாக அமையும். வெளிநாட்டுப் பிரயாணங்கள் நல்ல பலனைத் தரும். சில நிரந்தரமில்லாதவர்களுக்கு தொழில் நிரந்தர மாக அமையும். தடைப்பட்டிருந்த ஓய்வூதியம் முதலியன கைக்கு வரும். மேலதிகாரிகளின் ஆதரவும், புதிய வேலைப்பொறுப்புகளும் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வுகள் தேடி வந்து பெருமையைத் தரும். வருட பிற் பகுதியில் அதிகாரிகளுடன் வாக்குவாதங் களும், கவனக்குறைவால் சங்கடங்களும் ஏற்படும். வேலைப் பளுவும் அதிகரிக்கும்.

வர்த்தகர்களுக்கு தொழில் மேன்மைகள் அதிகரிக்கும். பெரிய முதலீடுகளைச் செய்ய முடியும். வியாபாரத்தில் அதிகலாபமும், பெரிய அளவில் நுகர்வோரின் அனுசரணையும் கிட்டும். கூட்டுத்தொழிலில் சிறப்பு ஏற்படும். முகவர் தொழில்கள் முன்னேற்றந்தரும். தேவையான வங்கி உதவிகளும் கிடைக்கும். வருடப்பிற்பகுதியில் லாபங்கள் குறையும். அரசாங்கம் மூலம் சோதனைகளும் ஏற்படும். கூட்டுத் தொழிலாளரிடையே கருத்து வேற் றுமை ஏற்படும். வியாபாரத்தில் பலநெருக் கடிகள் தோன்றும்.

பெண்களுக்கு தங்கள் திட்டங்கள் யாவும் நிறைவேறி மகிழ்ச்சி ஏற்படும். கணவன் மனைவியிடையே சிறப்பான ஒற்றுமை காணப் படும். திருமணத்தை எதிர்பார்த்திருப்போருக்கு ஒக்டோபரின் முன்திருமணம் கைகூடும். ஒக்டோபர் மாதத்தின் பின் குடும்ப வாழ்வில் அமைதி குன்றும். பொருளாதாரமும் சாதகமாக இராது.

மாணவர்களுக்கு கல்வியிலும், விளையாட் டுக்களிலும் சிறப்பான செயல்பாடுகள் இருக் கும். பரீட்சைகளில் சித்தி உண்டு. பரிசில்களும் பாராட்டுக்களும் உண்டு. நண்பர்களின் உதவி கள் கிடைக்கும். விளையாட்டுக்களிலும் சாதனை படைக்க முடியும். வருட பிற்பாதியில் கல்வியில் எதிர்பாராத தேக்கநிலை காட்டும். கடின முயற்சி எடுத்தால் மட்டுமே முன்னேற்றம் காணலாம்.

(தொடரும்)

**சி.சிதம்பரநாதக் குருக்கள்**

# பாம்புக்கு தலை மீனுக்கு வால் காட்டும் அரசியலில் கருணாநிதி ஈடுபட்டுள்ளார்

## வைகோ தெரிவிப்பு



ஆண்டிப்பட்டி —

ம.தி.மு.க எம்.பிக்களின் எண்ணிக்கையை வைத்து பதவி பெற்ற தி.மு.க அமைச்சர்கள் கூண்டோடு பதவி விலக வேண்டும் என்று ஆண்டிப்பட்டியில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தினார்.

அந்த பிரசாரக்கூட்டத்தில் அவர் பேசியதாவது:-

கோடிக்கணக்கான இதயங்கள் ஆண்டிப்பட்டி தொகுதி பக்கம் திரும்பியுள்ளன. இந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் நான் தெரிவிக்க விரும்பும் பிரதான கருத்து, முதலமைச்சர் ஜெயலலிதாவை எதிர்த்துப்போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் கட்டுப்பணத்தை இழப்பார்கள். அ.தி.மு.கவின் பொற்கால ஆட்சி தமிழகத்தில் தொடர அனைத்து மக்களும் விரும்புகிறார்கள்.

முதலமைச்சரின் சிறப்பான பணிக்கு இங்கு உதாரணம் கூற விரும்புகிறேன். வல்லரசான அமெரிக்காவில் கூட சுனாமி பாதித்த போது நிவாரணப்பணிகளை உடனடியாக மேற்கொள்ள முடியவில்லை. ஆறு மாத காலத்துக்கு பின்பே நிவாரணப்பணிகள் தீவிரப்படுத்தப்பட்டன. ஆனால், தமிழ்நாட்டில் சுனாமி பாதித்த பகுதிகளில் மறுநாளே நிவாரணப் பணிகளை முதலமைச்சர் தீவிரப்படுத்தி எந்தவொரு முதலமைச்சரும் செய்யமுடியாத சிறப்பான ஆட்சியைச்செய்துள்ளார்.

இதன் காரணமாக சகோதரி ஜெயலலிதா மீது பாரதப்பிரதமர் மன்மோகன்சிங்கும் நல்ல அபிப்பிராயம் வைத்துள்ளார். அவர் தனது கருத்துக்களை வெளியில் தெரிவிக்க முடியவில்லை என்றாலும், முதலமைச்சர் ஜெயலலிதாவை தனது மனதில் பாராட்டிவருகிறார்.

இன்றைய தினம் தி.மு.கவினர், ம.தி.மு.கவின் 4 எம்.பிக்களின் எண்ணிக்கையையும் சேர்த்து மத்திய அமைச்சர் பதவிகளை கூடுதலாக பெற்றதாக பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி என்னிடம் தெரிவித்த கருத்துகளைக் கூட்டங்களில் நான் பேசி வருகிறேன்.

ஆனால், இதனை தயாநிதிமாறன் மறுத்து வருகிறார். இந்த விடயத்தில் அவர் மறுப்பு தேவையில்லை. சோனியாகாந்தி மறுத்தால் மட்டுமே அது நிஜமாகும். எனவே, ம.தி.மு.கவை அடையாளம் காட்டி பதவி பெற்ற தி.மு.க மத்திய அமைச்சர்கள் தங்கள் பதவிகளை ர்ராஜினாமா செய்ய வேண்டும் என்று இந்தக்கூட்டத்தின் வாயிலாக அறைகூவல் விடுக்கிறேன். கருணாநிதியைப் பொறுத்த வரையில் பாம்புக்கு தலையையும், மீனுக்கு வாலையும் காட்டும் அரசியலில் ஈடுபட்டு வருகிறார். அவரது அரசியல் தமிழகத்தில் எடுபடாது. என் மீது வழக்குப்போடும் விடயத்தில் தயாநிதிமாறனின் சலசலப்புக்கு நான் அஞ்சமாட்டேன். அ.தி.முகவும், ம.தி.மு.கவும் ஒரு கொடியில் பூத்த இரு மலர்களாகத் திகழ்கின்றன என ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ கூறினார்.

மதுரையில் மற்றுமொரு பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசியபோது -

அ.தி.மு.க அரசின் பொற்கால ஆட்சி தொடர்ந்திட மக்கள் காட்டும் ஆதரவு அலை பெருகிவருகிறது.

அனைத்து மக்களின் சிரமங்களைப் போக்கும் அரசாக இந்த அரசு திகழ்கிறது.

பொடா சட்டத்தை எதிர்த்த ம.தி.மு.க எப்படி அ.தி.மு.கவுடன் கூட்டணி சேர்ந்தது எனக் கேட்கின்றனர். பொடா சட்டத்தை கொண்டுவந்தது பா.ஜ.க அரசுதான். மிசா சட்டத்தின் சித்திரவதையினால் 2 தி.மு.கவினர் இறந்தனர். தி.முகவை தடை செய்ய காங்கிரஸார் திட்டமிட்டிருந்தனர். அவர்களோடு தி.மு.க எப்படி கூட்டணி சேர்ந்துள்ளது?

ம.தி.மு.கவைப் பாதிக்கும் அளவுக்கு தி.மு.க செயற்பட்டது. இதனால் அ.தி.மு.கவுடன் கூட்டணி வைக்க வேண்டும் என ம.தி.மு.கவினர் விரும்பினர். ஆனால் அ.தி.முகவுடன் கூட்டணி வைத்தோம் என்றார் வைகோ.




# ஈழத்தமிழரைக் காட்டிக்கொடுக்கும் அதிமுக்கிய தலைவர் ஜெயலலிதா!

## ராமதாஸ் குற்றச்சாட்டு



சென்னை —

தேர்தல் பிரசாரத்தில் எல்லாக் கட்சிகளுமே அரசியல் நாகரிகம், கண்ணியத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்று பா.ம.க நிறுவுனர் ராமதாஸ் தெரிவித்தார்.

சென்னையில் நிருபர்களிடம் அவர் கூறியதாவது-

ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோவின் பிரசாரம் தனிப்பட்ட முறையில் தி.மு.க தலைவரைத் தாக்குவதாக உள்ளது. வைகோ எனக்கு நண்பர் தான். தேர்தல் களத்தில் தனிப்பட்ட முறையில் குடும்பத்தைப்பற்றி பேசுவது சரியல்ல. இது அரசியல் பண்பாடு ஆகாது.

ஜெயலலிதா ஆட்சியின் சாதனைகளைச் சொல்லி வைகோ பேசட்டும். அப்போது பொடாவில் வைகோ சிறையிலிருந்த 19 மாதங்கள் பற்றியும் வாக்காளர்கள் கேட்பார்கள். அதற்கும் அவர் பதில் சொல்ல வேண்டும்.

இது அவருடைய இயக்கம் சம்பந்தப்பட்டது. தமிழினம் சம்பந்தப்பட்டது. ஈழத்தமிழர்கள் பாதிக்கப்படும் போதெல்லாம் தமிழகத்தில் அழுவதற்குக்கூட இந்த ஆட்சியில் உரிமை மறுக்கப்பட்டது.

இதைப்பற்றிப் பேசுவதைத் தடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதற்காக வைகோவுக்கு தரப்பட்ட பரிசுதான் 19 மாதங்கள் சிறைவாசம்.

வைகோ இனி அரசியலைப்பேசி பிரசாரம் செய்ய வேண்டும்.

மற்ற மாநிலங்களுக்கு அரசியல் நாகரிகம் கற்றுத்தரும் மாநிலமாக தமிழகம் இருந்தது. இப்போது நிலைமை மாறிவிட்டது.

இந்தத் தேர்தலில் எந்தக்கட்சியாக இருந்தாலும் நாகரிகத்தோடு, கண்ணியத்தோடு பிரசாரம் செய்யவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

தனித் தமிழ் ஈழப்பிரச்சினையில் தங்கள் நிலையை முதல்வர் ஜெயலலிதா ஆதரிக்கும் வகையில் செயற்படுவோம் என்று வைகோவும், விடுதலைச்சிறுத்தைகள் பொதுச்செயலாளர் திருமாவளவனும் கூறியிருப்பதாகச் செய்திகள் வந்தன.

எந்தக்காலத்திலும் ஈழத்தமிழர்களைக் காட்டிக்கொடுக்கும் முக்கிய தலைவர்களில் அதிமுக்கியமான தலைவராக இருப்பவர் ஜெயலலிதா தான் என்றார் ராமதாஸ்.

## மக்கள் குறித்து கவலைப்படாதவர் ஜெயலலிதா என்கிறார் ஸ்டாலின்

பூந்தமல்லி —

நாட்டையும் மக்களையும் பற்றி கவலைப்படாதவர் ஜெயலலிதா என்று தி.மு.க துணைப் பொதுச் செயலாளர் ஸ்டாலின் கூறினார்.

கடந்த 5 ஆண்டுகளாக தமிழகத்தில் அக்கிரம, ஆணவ சர்வாதிகார ஆட்சி நடந்துவருகிறது.

இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் இந்தத் தேர்தல். தி.மு.க தலைவர் கருணாநிதி அறிவித்துள்ளபடி இரண்டு ரூபாவுக்கு ஒரு கிலோ அரிசியும், இலவசக் கலர் தொலைக்காட்சியும் கட்டாயம் வழங்குவோம் எனத் தெரிவித்தார்.

# தமிழுக்கும், தமிழர்களுக்கும் கருணாநிதி என்ன செய்தார்?

## கேட்கிறார் திருமாவளவன்



சென்னை —

தமிழர்களுக்காக கருணாநிதி என்ன செய்தார் என்று திருமாவளவன் பிரசாரக் கூட்டத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மேலும் திருமாவளவன் பேசியதாவது -

அ.தி.மு.க தலைமையிலான ஜனநாயக மக்கள் கூட்டணி வெற்றிக் கூட்டணி ஆகும். தலித் மக்களை மதிக்கக்கூடிய ஒரேதலைவர் ஜெயலலிதா. எங்கள் கட்சிக்கு 9 தொகுதிகள் தந்து தேர்தலில் அங்கீகாரம் தந்த ஜெயலலிதாவை மறக்க மாட்டோம்.

தி.மு.க தலைவர் கருணாநிதி தோல்விப் பயத்தில் செயற்படுத்த முடியாத பல கவர்ச்சித் திட்டங்களை அறிவித்து வருகிறார். அவர் கூறியுள்ள கலர் தொலைக்காட்சித் திட்டம் அவரின் குடும்ப முன்னேற்றத்துக்காக அறிவிக்கப்பட்டது.

கருணாநிதி - தமிழ், தமிழர் என்று கூறி பிழைப்பு நடத்துகிறாரே தவிர தமிழுக்காகவும், தமிழர்களுக்காகவும் எதுவும் செய்தது கிடையாது. தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தை நிறுவியவர் எம்.ஜி.ஆர். அவர் ஈழ தமிழர்களுக்காக பல உதவிகள் செய்துள்ளார். 8 ஆவது உலகத் தமிழ் மாநாட்டை நடத்தியவர் முதலமைச்சர் ஜெயலலிதா. மேலும் இவர் ஈழத் தமிழர் பிரச்சினையை தீர்த்து வைக்க தற்போது பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்.

எனவே நானும், வைகோவும் இந்த கூட்டணியில் இணைந்திருக்கிறோம். மீண்டும் தமிழகத்தில் ஜெலலிதாவின் ஆட்சி அமைவது உறுதி. தலித் மக்கள் ஜெயலலிதாவின் தலைமையில் ஒருங்கிணைந்து உள்ளனர். ஆகவே வெற்றி உறுதியாகிவிட்டது என அவர் பேசினார்.

# உலக அரங்கில்

## நேபாளத்தில் ஊரடங்கு



காத்மண்டு —

நேபாளத்தில் மன்னர் ஞானேந்திராவின் ஆட்சிக்கு எதிராகவும், உடனடியாக பொதுத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தியும் 7 கட்சி கூட்டணி நேற்று நான்காவது நாளாகவும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்திய நிலையில் அங்கு ஊரடங்குச் சட்ட நேரம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே நேபாளத்தின் தென்மேற்குப் பகுதியில் மாவோ கிளர்ச்சிவாதிகள் நடத்திய தாக்குதலில் 4 படையினர் உட்பட 19 பேர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதல் நடைபெற்ற வேளை சிறையில் அடைக்கப்பட்டிருந்த 104 கைதிகள் தப்பிச் சென்றுவிட்டதாக நேபாளத்திலுள்ள தனியார் வானொலி நிலையமொன்று அறிவித்தது.

## முக்கிய கிளர்ச்சித் தலைவர் ஈராக்கில் பிடிபட்டார்

பாக்தாத் —

ஈராக்கில் செயற்படும் கிளர்ச்சிவாதக்குழுவின் தலைவரான அல்சர்காவிக்கு நெருக்கமான ஒருவரை தலைநகர் பாக்தாத்தில் வைத்து கைது செய்துள்ளதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர் மொகமட் அல் - உபாடி எனவும் இவர் வடபகுதி பாபெல் மாகாணத்தில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டவரெனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் 7 ஆம் திகதி இவரை கைது செய்த போதிலும், மரபணு பரிசோதனைக்குட்படுத்தி உறுதி செய்யும்வரையில் இவர் கைது செய்யப்பட்டவிபரம் வெளியிடப்படவில்லையென அமெரிக்க இராணுவம் தெரிவித்தது.

## அமெரிக்காவில் புயல் 28 பேர் உயிரிழப்பு




நியூயோர்க் —

அமெரிக்காவின் டென்சி மாநிலத்தை நேற்று முன்தினம் பலத்த புயல் தாக்கியதில் 28 பேர் உயிரிழந்ததுடன் பெருமளவு சொத்துக்களும் நாசமடைந்துள்ளன.

இந்த புயலினால் நூற்றுக்கணக்கான வீடுகள் இடிந்து வீழ்ந்ததுடன், வீட்டின் கூரைகளும் தூக்கி வீசப்பட்டன. அத்துடன் மரங்களும் வேருடன் சாய்ந்தன. வீதிகளில் சென்று கொண்டிருந்த கார்களும் தூக்கி வீசப்பட்டன.

மின்கம்பங்கள் சரிந்து விழுந்ததில் பெருமளவு நகரங்கள் இருளில் மூழ்கியுள்ளன.

## சர்காவி மாற்றம்



காபூல் —

ஈராக்கில் கிளர்ச்சிவாதக் குழுக்களுக்கு பொறுப்பாக இருந்த அல்சர்காவி இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாக ஒசாமா பின்லேடனுக்கு குருவாக இருந்தவரின் மகனான குதைபா அசாம் தெரிவித்தார்.

சர்காவியின் அண்மைக்கால போர்த் தந்திரங்களில் ஏற்பட்ட அதிருப்தியே அவரை மாற்றுவதற்கான காரணமெனவும் அவர் தெரிவித்தார்.

சர்காவியின் இடத்துக்கு அப்துல்லா அல் - பாக்தாதி என்பவர் நியமிக்கப்பட்டார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# இளஞ்சிவப்பு கம்பள வரவேற்பு கேட்கிறார் மங்கள சமரவீர!

கொழும்பு

நோர்வேயில் தனக்கு செங்கம்பள வரவேற்புத் தராமல் இளஞ்சிவப்பு கம்பள வரவேற்பளிக்க வேண்டுமென்று நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மிடம் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர கிண்டலடித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அண்மையில் கொழும்பு வந்த எரிக்சொல்ஹெய்ம் மற்றும் புதிய விசேட தூதுவர் ஜோன் ஹன்சன் பௌயர் ஆகியோர் மங்கள சமரவீரவை சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்பில் - ஐரோப்பிய பயணத்தின் போது நீங்கள் ஏன் நோர்வேக்கு வரவில்லை என்று மங்களவிடம் எரிக்சொல்ஹெய்ம் கேள்வி எழுப்பினார்.

தன்னை நோர்வேக்கு அழைக்க வேண்டும் என்ற தொனியில் மங்கள சமரவீர பதிலளித்தார். நோர்வே பிரதமர் சார்பாக தான் உங்களுக்கான அழைப்பைக் கொண்டு வந்திருப்பதாக எரிக் சொல்ஹெய்ம் கூறினார்.

இதற்கு பதிலளித்த மங்கள சமரவீர நான் அங்கு வரும்போது செங்கம்பள வரவேற்பு அளிக்கப்படுவதை விரும்பவில்லை. எனக்கு இளஞ்சிவப்புக் கம்பள வரவேற்புத்தான் அளிக்கப்படவேண்டும் என்றார்.

விடுதலைப் புலிகளுக்கு நோர்வே அரசாங்கம் செங்கம்பள வரவேற்பளித்ததை மறைமுகமாகச் சுட்டிக் காட்டும் விதத்தில் மங்கள இந்தக் கருத்தை தெரிவித்ததாக கூறப்படுகிறது.

# கருணா குழுவினர் இருவர் துப்பாக்கிச் சூட்டில் படுகாயம்!

மட்டக்களப்பு

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டில் கருணா குழுவைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்தனர்.

நேற்றுமாலை 6.30 மணியளவில் கறுவாக்கேணியூடாக வாழைச்சேனை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோதே - இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

அஜித் மற்றும் இன்னொரு நபருமே சம்பவத்தில் காயமடைந்தவர்களாவர். இவர்கள் இருவரும் பொலிஸாரின் ஜீப் வண்டியில் வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

இவர்கள் இருவரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் பொலிஸாரின் பலத்த பாதுகாப்புடன் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

# விக்னேஸ்வரன் கொலையாளியை கண்டுபிடிக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு

திருகோணமலை தமிழ்மக்கள் பேரவைத்தலைவர் மாமனிதர் வ.விக்னேஸ்வரன் படுகொலை தொடர்பான விசாரணைகளை ஆரம்பிக்கும்படி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ - குற்றப்புலனாய்வுத் துறையினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப்பொலிஸ்மா அதிபர் அசோக் விஜயதிலக தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவைத்தலைவரின் படுகொலைச்சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் தராதரம் பார்க்காது தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொலை நடந்த இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் உட்பட பல்வேறு தரப்பினரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், விசாரணை மேற்கொள்ளவதற்கென விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகவும் அசோக் விஜயதிலக மேலும் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் தூதுவராக அட்மிரல் தயா சந்தகிரி!

கொழும்பு

கூட்டுப் படைகளின் தளபதியாக இருக்கும் அட்மிரல் தயா சந்தகிரி பாகிஸ்தானுக்கான இலங்கைத் தூதுவராக விரைவில் நியமிக்கப்படவிருப்பதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இஸ்லாமாபாத்தில் இலங்கைத் தூதுவராக சேவை நீடிப்பில் உள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சிறிலால் வீரசூரிய அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டு, இவருக்குப் பதிலாக தயா சந்தகிரி நியமிக்கப்பட இருப்பதாகத் தெரியவருகிறது.

கடற்படைத் தளபதியாக தயா சந்தகிரி பொறுப்பு வகித்த 2001-2005 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கடற்படைக்கான கொள்வனவு முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்த இரு வாரங்களுக்கு முன்னதாக தனிநபர் விசாரணைக் குழுவை மகிந்த ராஜபக்ச நியமித்திருந்தார்.

நிமல் காமினி அமரதுங்க தலைமையிலான இந்த விசாரணைக்குழு தனது பணிகளைத் தொடங்கியுள்ளது. இந்த முறைகேடுகள் தொடர்பாக ஏப்ரல் 17 ஆம் திகதி வரை பொது மக்களின் கருத்துக்களை ஆணைக் குழு கேட்டறிய உள்ளது.

அதன் பின்னர் இரகசிய விசாரணைக்கான நாள் அறிவிக்கப்படும். இந்த நிலையில் - தயா சந்தகிரியை பாகிஸ்தான் தூதுவராக மகிந்த ராஜபக்ச முடிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் தென்கொரியத் தூதுவராக லிபரல் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அசித பெரேரா, ஜோர்டானுக்கு - ஏ.டபிள்யூ. மொஹொட்டல, மியான்மாருக்கு - பி.ஏ.டி.சமரசேகர, ரஷ்யாவுக்கு- யு.வீரதுங்க ஆகியோர் நியமிக்கப்படக்கூடும் என்றும் தெரிய வருகிறது.

## நோர்வேயை வெளியேற்றி...

ஜே.வி.பியினர் அமைதியை எதிர்ப்பதன் மூலம் போரை விரும்புகின்றனர். தமிழர் தாயகத்தை இராணுவத்தின் மூலம் ஆக்கிரமிக்கிற ஆசையை வெளிப்படுத்துகின்றது தான் நோர்வே எதிர்ப்பு இயக்கம் என்பது. இத்தகைய கேலிக்கூத்தான சக்திகளுடன் இணைந்தா மகிந்த ராஜபக்ச அமைதி முயற்சிகளை முன்னெடுக்கப் போகிறார் என்பது தான் எங்களது பாரிய சந்தேகம்.

இனப்பிரச்சினையில் யுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரிடையே அவநம்பிக்கை உள்ள நிலையில் மூன்றாம் தரப்பு அனுசரணை அவசியமானது.

நோர்வேத் தரப்பினரது பாரபட்சமற்ற, நடுநிலையான, அமைதியை உருவாக்கும் அர்ப்பணிப்புத் தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம்.

ஜே.வி.பி.யினரை மகிழ்விப்பதற்காக ஜெனீவா பேச்சுக்களில் யுத்த நிறுத்த ஒப்பந்த திருத்தத்தை அரசாங்கக் குழு முன்வைத்தால் அதை நாங்கள் நிராகரிப்போம்.

யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பிலான விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு தெளிவாக உள்ளது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் திருத்த வேண்டிய எதுவித தேவையும் இல்லை. நடைமுறைப்படுத்த வேண்டியதுதான் அவசியமானது. ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்ள அரசாங்கம் முனைந்தாலும் எமது இந்த நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவே இருப்போம் என பாலசிங்கம் மேலும் தெரிவித்தார்.

## 2ஆம் கட்டப்...

விடுதலைப் புலிகளிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது என சுவீஸ் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முதல் சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்ற சட்டோ டி போசேயில் போதிய வசதிகள் இன்மையால் மாற்று இடம் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

ஜெனிவாவிலிருந்து 20 நிமிட பயணத் தூரத்தில் லா பார்கரொல்லே அமைந்துள்ளது. சுவிஸின் அல்ப்ஸ் மலையை எதிர்நோக்கிய ஏரியுடன் கூடிய பகுதி இது.

இந்த விடுதியில் குளிரூட்டப்பட்ட 39 அறைகள் உள்ளன. அனைத்தும் அல்ப்ஸ் மலை மற்றும் ஏரியை எதிர்நோக்கியதாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## மூதூர் மற...

வணக்க நிகழ்வு நடைபெற்றது.

மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் பொதுச்சுடலை ஏற்னார்.

திருமலை கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் - தமிழீழ தேசியக் கொடியை போர்த்தி மலர்மாலை அணிவித்தார்.

லெப்.கேணல் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர் கீதன், மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், மகளிர் பேரவைத் தலைவி கண்மணி வடிவேல், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரைரட்ணசிங்கம், சிவாஜிலிங்கம் ஆகியோர் நினைவுரைகளை நிகழ்த்தினர்.

மாமனிதர் விக்னேஸ்வரனின் புகழுடல் நேற்றுமாலை 7 மணியளவில் வவுனியாவுக்கு கொண்டுவரப்பட்டது. வவுனியா நகரசபை மண்டபத் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த புகழுடலுக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், பெருமளவான பொதுமக்களும் அஞ்சலி செலுத்தினர்.

மாமனிதரின் புகழுடல் இன்று கிளிநொச்சிக்கு எடுத்துவரப்படவுள்ளது.

## கடற்படை...

கடற்பயணத்துக்காக இலங்கைக் கடற்படையினர் - பயணிகள் படகு ஒன்றை வழங்குவதாகவும், அந்தப் படகில் போர்நிறுத்தக் கண்காணிப்பாளர்கள் இடம்பெறுவார்கள் எனவும் பாதுகாப்பு அமைச்சிடமிருந்து எமக்கு அறிவிக்கப்பட்டது.

பயணிக்கும்போது விடுதலைப் புலிகள் எந்தவிதமான ஆயுதங்களை தங்களுடன் வைத்திருக்கமாட்டார்கள் என நம்புகிறோம். இலங்கை கடற்படையினரால் தகுந்த பாதுகாப்பு வழங்கப்படும். போகும் பாதையும் ஏனைய வழிமுறைகளும் கண்காணிப்புக் குழுவினருடன் கலந்தாலோசிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

AIMS
ACADEMY OF INFORMATION MANAGEMENT & SYSTEM STUDIES
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க......
Batch IV Start on :11.04.06 4.30 pm
Diploma in GNU/Linux Administration
- Redhat/Fedora/Mandrake Linux Installation
- Open Source world Introduction
- Open Source Software Installation & Configuration
- Fundamentals of Command Line Operations.
- Networking using Linux Environment
மேலதிக விபரங்களுக்கு:
# 118, பலாலி வீதி, தபாற்பெட்டிச்சந்தி, திருநெல்வேலி
Center for FOSS & LAMP

மாபெரும் கருத்தரங்கு தொடர்கள்
LOGIC
R.P. சர்மா
S.R.J. சுதன்
ஆரம்பம் :- 16:04:2006
ஞாயிறு 09.00 A.m
கொழும்பு றோயல் கல்லூரியில் எதிர்பார்க்கை வினாத் தொகுப்புக்கள்
அளவையியல் சுருக்க கையேடு
அலகு ரீதியான குறிப்பேடுகள்
D.C.M
யாழ்.நகர்
பதிவுகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்

# படையினரின் தாக்குதலில் குடும்பஸ்தர் படுகாயம்!

யாழ்ப்பாணம்

புத்தூரில் படையினரின் கண்மூடித்தனமான தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைந்தவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆவரங்கால் மேற்கு - இந்து இளைஞர் வீதியைச் சேர்ந்த மார்க்கண்டு ரவிச்சந்திரன் (வயது 38) என்பரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகிறார்.

நேற்றுமுன்தினம் சிறுப்பிட்டிப் பகுதியில் படையினரின் வாகனம் ஒன்றின் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலையடுத்து அப்பகுதியிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் நின்றவர்கள் மற்றும் போக்குவரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள் மீது படையினர் கண்மூடித்தனமான தாக்குலை நடத்தினர்.

தனது தையல் கடையில் வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மேற்படி நபரை கடைக்குள் வைத்து படையினர் தாக்கியதாலேயே படுகாயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# சுதந்திரக் கட்சி மாநாடு சட்டவிரோதமானது

## என்கிறார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா

கொழும்பு

தனது பங்களிப்பு இல்லாமல் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய மாநாடு நடத்தப்பட்டமை கட்சியின் சட்டதிட்டங்களுக்கு முரணானது என கட்சியின் தலைவி முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேசிய மாநாடு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாநாடு நடைபெறுவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் லண்டனிலிருந்து கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேனவுக்கு எழுதிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

கட்சியின் தீர்மானங்களை எடுப்பதற்கு தலைவி என்ற முறையில் என்னுடைய தலைமையில் நிறைவேற்றுக்குழு மற்றும் மத்திய குழு என்பன கூட்டப்படவேண்டும்.

ஏப்ரல் மாதம் நாடு திரும்பியதும் மே மாத முதல் வாரத்தில் கட்சியின் நிறைவேற்றுக்குழு மற்றும் மத்திய குழு கூட்டங்கள் நடத்த எண்ணியிருந்தேன்.

45 ஆண்டு காலமாக கடைப்பிடிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு முரணாக இந்த மாநாடு நடத்தப்படுவதால் அதனை இடைநிறுத்த வேண்டும் என அந்தக்கடிதத்தில் அறிவித்திருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும், சந்திரிகாவின் கடிதத்தை பொருட்படுத்தாது கடந்த வெள்ளிக்கிழமை கட்சி மாநாடு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் கட்சியின் பதில் தலைவராக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டார்.

## கடல் பயண நிபந்தனை...

சென்றுவருவதற்கு வான்வழி போக்குவரத்தே பயன்படுத்தப்பட்டு வந்தது.

ஆனால், அண்மையில் அரசாங்கத்தினதும், படைத்துறையினதும் கடும்போக்குக் காரணமாகத் திட்டமிடப்பட்டு, மறுக்கப்பட்டதனாலேயே நாம் கடல்வழிப் போக்குவரத்தினை கேட்டிருந்தோம்.

எம்மிடம் மிகவும் வலுவான கடற்படையொன்று உள்ளது. முன்னைய தடவைகளில் எமது போராளிகள் கடல் வழிப் பயணங்களை மேற்கொண்ட போது எமது கடற்படையின் படகுகளையே பயன்படுத்தியிருந்தோம் என்பதைத் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

ஆயினும், இம்முறை கடற்படையின் படகிலேயே நாம் பயணிக்க வேண்டும் என்பதை எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது. அதில் பயணிப்பதற்கு எமது தளபதிகளும், போராளிகளும் தயாராக இல்லை என்பதையும் தங்களுக்கு நினைவூட்ட விரும்புகின் றேன்.

மேலும், ஜெனிவாவில் கடந்த மாதம் நடைபெற்ற பேச்சுக்களின் போது எட்டப்பட்ட தீர்மானத்தின்படி, போர்நிறுத்த உடன்படிக்கையை செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. இது அவர்கள் போர்நிறுத்தத்தை நடை முறைப்படுத்துவதில் அவர்களுக்கிருக்கின்ற அசிரத்தையை - சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதில் அவர்களுக்கிருக்கின்ற ஆர்வமின்மையை தெளிவாகக் காட்டுகிறது.

ஆகவே, எமது முன்னைய முறைகளில் கடைப்பிடிக்கப்பட்டதுபோன்று, இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வழித்துணையுடன் எமது படகுகளில் எமது தளபதிகள் பயணம் செய்வதற்குரிய ஒழுக்கினை விரைவாகச் செய்துதரும்படி கேட்டுக்கொள் கின்றேன்.

மாறாக, இந்தக் கோரிக்கை இழுத்தடிக்கப்பட்டு, நிராகரிக்கப்படுமாக இருந்தால், முன்னரைப் போன்று எமது சொந்த முறையினைப் பயன்படுத்தி எமது பயணத்தை மேற்கொள்வோம் என்பதைத் தங்களுக்குத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகின்றேன். இந்தப் பயணத்தை வழிமறித்து இடையூறு செய்ய கடற்படை எத்தனிக்குமாக இருந்தால், அது பாரிய போர் நிறுத்த மீறலாகவே அமையும்.

அத்துடன், அவ்வாறான நிலைமை ஏற்படுமாக இருந்தால் எதிர்காலத்தில் கடற்படைக்கும் அதேநிலைமைதான் ஏற்படும் என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தநிலைமை, போர்நிறுத்த முறிவுக்கே இட்டுச்செல்லும் எனவும் நாம் அஞ்சுகிறோம். ஆகவே, எமது தளபதிகளின் பயண ஒழுங்கை விரைவாக ஏற்படுத்தித் தரும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொள்ளைச்...

இவர்கள் பற்றிய விபரங்கள் சில எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன. இவர்களின் இந்தச் செயற்பாட்டினையும், அச்சுறுத்தல்களையும் நாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. எனவே இவர்கள் பற்றிய தகவல்களை உடனுக்குடன் எமது கவனத்துக்கு அறியத்தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 10.04.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

20.03.2006 ஆம் திகதியின் தொடர்ச்சி...


# இரசாயனவியல் - II

## பகுதி B – கட்டுரை

5) (a) (i) இணைந்த வாயு விதியை எழுதுக?
இவ்விதி எந்த வகையான தொகுதிக்கு பிரயோகிக்கப்படக்கூடியது?

$PV = \frac{1}{3}mN\bar{c}^2$ என்ற சமன்பாட்டிலிருந்து ஆரம்பித்து இணைந்த வாயு விதியைப் பெறுக?

(b) குமிழ்கள் A உம் B உம் ஒரு குழாய் வாயில் மூலம் தொடுக்கப்பட்டன. ஆரம்பத்தில் குழாய் வாயில் மூடப்பட்டு இருந்தது. வாயு நிலையிலுள்ள $O_2$ ஐ மட்டும் A உம் வாயு நிலையிலுள்ள எதீனை மட்டும். B உம் கொண்டுள்ளன. கீழுள்ள வரிப்படத்தில் குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் ஒவ்வொரு வாயுவும் இருக்கிறது.




அதன் பின் குழாய் வாயில் திறக்கப்பட்டது. வாயுக்கள் நன்றாக கலக்க விடப்பட்டன. வெப்பநிலைகள் மாறாது தொடர்ந்தும் பேணப்பட்டது. வாயுக்கள் இலட்சிய நடத்தையுடையவை எனக்கொண்டு பின்வருவனவற்றை S.I அலகுகளில் கணிக்க? மேற்படி நிபந்தனையில் $C_2H_4$, $O_2$ இற்கிடையே தாக்கம் இல்லை என கொள்க?

(i) தற்போது குமிழ் A ல் $O_2$ இன் பகுதி அமுக்கம்?
(ii) தற்போது குமிழ் B ல் $C_2H_4$ இன் பகுதி அமுக்கம்?
(iii) $C_2H_4$, $O_2$ இற்கிடையிலான மூல் விகிதம்?
(iv) $C_2H_4$, $O_2$ உம் சேர்ந்து வெடிக்கவைக்கப்பட்டு வெப்பநிலை மீண்டும் $27^0C$ ற்கு கொண்டு வரப்பட்டது. எஞ்சிய வாயுக்கலவையின் அமுக்கம் ( கலவை $CO_2 + O_2$)
(v) மேற்படி கணிப்புகளின் போது மேற்கொள்ளப்பட்ட எடுகோள்களில் 3 தருக.

(c) $NH_3$ ஆனது நீரிலும் சேதனத்திரவம் B இலும் கரையும். $NH_4Cl$ ஆனது நீரில் மட்டுமே கரையும். நீரும் B உம் கலக்குந்தகவற்றவை. 1.30 $moldm^{-3}$ $NH_4Cl$ இன் $100cm^3$ நீர்க்கரைசலானது $100cm^3$ B உடன் நன்கு குலுக்கி சமநிலை அடையவிடப்பட்டது. $25^0C$ இல் பெறப்பட்ட சமநிலையில் B இலுள்ள $NH_3$ இன் செறிவு $1 \times 10^{-6}$ $moldm^{-3}$ ஆகும். இந்நிலையில் நீர்க்கரைசலின் $P^H = 4.585$ ஆகும். $25^0C$ இல் நீரின் அயன் பெருக்கம் $1 \times 10^{-14}$ $mol^2$ $dm^{-6}$
பின்வருவனவற்றை கணிக்க?

(i) நீர்ப்புடையில் ஐதரசன் அயன் செறிவு. (நீரின் அயனாக்கத்தால் வரும் $H^+$ஐ புறக்கணிக்க)
(ii) நீர்ப்படையில் சுயாதீன $NH_3$ இன் செறிவு
(iii) நீருக்கும் B இற்குமிடையே $NH_3$ இன் பங்கீட்டு குணகம்.
(iv) $NH_4^+$ அயனின் நீர்ப்பகுப்பு மாறிலி
(v) $NH_3$ இன் அயனாக்க மாறிலி

6) (a)
(i) $A_2B$ ஆனது, நீரில் அரிதாய் கரையும் திறனுள்ள அயனிக் சேர்வையாகும். $A_2B$ ன் A ஒரு வலுவளவுள்ள உலோகம். B ஓர் அலோகம். $A_2B$ திண்மத்திற்கும் நிரம்பிய நிலையில் நீரல் கரைந்துள்ள $A_2B$ கரைசலுக்கும் இடையேயான சமநிலை நிகழ்வுக்கு சமப்படுத்திய இரசாயனச்சமன்பாட்டை தருக.
இச்சமன்பாட்டைப்பயன்படுத்தி சமநிலை விதியில் இருந்து $A_2B$ ன் கரைதிறன் பெருக்கம் Ksp இற்குரிய கோவையை பெறுக?

(ii) $30^0C$ இல் $Ag_2CrO_4$ இனால் நிரம்பல் செய்யப்பட்ட $1l$ நீர்க்கரைசல் உள்ளது இதற்குள் 1.94g $K_2CrO_{4(S)}$ கரைக்கப்படுகிறது. இங்கு $K_2CrO_4$ கரைவதால் தோன்றும் $CrO_4^{2-}{}_{(aq)}$ செறிவுடன் ஒப்பிடுகையில் ஏற்கனவே நிரம்பிய நிலையில் உள்ள போதான $CrO_4^{2-}$ இன் செறிவை புறக்கணிக்கலாம் எனக்கொள்க. வீழ்படிவு தோன்றிய பின் கரைசலில் உள்ள $Ag^+$ இன் செறிவை காண்க?
( சா. அ . தி Ag = 108, K = 39, Cr = 52, O = 16 )
( $Ksp(Ag_2CrO_4) = 4 \times 10^{-12}$ $mol^3$ $dm^{-9}$ )

(iii) மேற்படி பகுதி (ii) இல் தோன்றிய வீழ்படிவின் திணிவை காண்க?

(b) $25^0C$ இல் பெறப்பட்ட பின்வரும் தரவுகள் உமக்குத் தரப்பட்டுள்ளன.
$E\theta_{Mg^{2+}/Mg} = -2.370V$, $E\theta_{Pb^{2+}/Pb} = -0.126V$

(i) $25^0C$ இல் மேற்படி இரு மின்வாய்களும் உருவாக்கும். கலத்தின் மின் இயக்க விசையை காண்க?
(ii) மேற்படி கலத்தின் மின் இயக்க விசை 2.240V ஆவதற்கு $Pb^{2+}$ இன் செறிவுக்கு யாது நிகழ வேண்டும்?
(iii) மேற்படி கலத்தின் மின் இயக்க விசை 2.246V ஆக மாறுவதற்கு $Mg^{2+}$ இன் செறிவுக்கு யாது நிகழ வேண்டும்?
(iv) மேற்படி கலத்தின் மின் இயக்க விசை 2.247V ஆக மாறுவதற்கு கலத்தின் வெப்பநிலைக்கு யாது நிகழ வேண்டும்?

(C) வெப்பநிலை $400^0C$ இல் வாயு அவத்தையில் பின்வரும் சமநிலை உண்டு.

$$2SO_{2(g)} + O_{2(g)} \rightleftharpoons 2SO_{3(g)}$$

கண்ணாடிக்குமிழ் ஒன்று $SO_2$, $O_2$ ஆகிய வாயுக்களை ஆரம்பத்தில் பகுதி அமுக்கங்கள் முறையே 2:1 ஆகுமாறு நிரப்பப்பட்டது. தொகுதி $400^0C$ இல் பேணப்பட்டது. ஊக்கியாக $V_2O_5$ திண்மமும் சிறிதளவு பயன்பட்டது. (பரிசோதனை I) சமநிலையில் $SO_2$ இன் மூல் பின்னம் $Xso_3 = 0.7$ ஆக காணப்பட்டது.
அதன் பின் தொகுதி $600^0C$ இற்கு வெப்பமேற்றப்பட்டது. இவ்வெப்பநிலையில் பெறப்பட்ட சமநிலையில் கலவையில் $SO_2$ இன் மூல் பின்னம் $Xso_2 = 0.4$ ஆக இருந்தது.

(i) $400^0C$ இன் சமநிலையில் $SO_2$, $O_2$ இன் மூல்பின்னங்களை காண்க?
(ii) $400^0C$ இல் சமநிலைக்கு Kp இன் பெறுமதியை கணிக்கமுடியுமா? ஆம் எனில் கணிக்க? இல்லை எனில் காரணத்தை விளக்குக?
(iii) $600^0C$ இல் சமநிலையில் $SO_3$, $O_2$ இன் மூல் பின்னங்களை கணிக்க?
(iv) $400^0C$ இலுள்ள Kp இலும் $600^0C$ இலுள்ள Kp பெறுமதி கூடுமா அல்லது குறையுமா?
(v) மேலுள்ள தரவுகள் கணிப்புகளில் இருந்து இம்முற்தாக்கம் அக வெப்பத்தாக்கமா அல்லது. புறவெப்பத்தாக்கமா என்பதை காரணம் தந்து விமர்சிக்க.
(vi) வெப்பநிலை அதிகரிக்கப்படுகையில் வாயுக்கலவையின் அடர்த்திக்கு யாது நிகழும்?
(vii) வெப்பநிலை அதிகரிக்கப்படுகையில் வாயுக்கலவையின் சார் மூலக் கூறுத்திணிவிற்கு யாது நிகழும்?

7) (a)
(i) நியம தோன்றல் வெப்பவுள்ளுறையை வரையறுக்க? சேர்வைகளின் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை அவற்றின் நியம உள்ளீட்டு சக்திக்கு சமன் என கொள்ளப்படுவதற்கான காரணம் யாது?
(ii) பின்வரும் ஐந்து தாக்கங்களுக்குமான வெப்பவுள்ளுறை மாற்றங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றிலிருந்து $H_2O_{2(aq)}$ இன் தோன்றல் வெப்பத்தை உள்ளீட்டு சக்தி முறையாலேயே காண்க?

I. $SnCl_{2(aq)} + 2HCl_{(aq)} + H_2O_{2(aq)} \longrightarrow SnCl_{4(aq)} + 2H_2O_{(l)}$ $\Delta H = -372kJ$
II. $SnCl_{2(aq)} + HCl_{(aq)} + HOCl_{(aq)} \longrightarrow SnCl_{4(aq)} + H_2O_{(l)}$, $\Delta H = -314kJ$
III. $2HI_{(aq)} + HOCl_{(aq)} \longrightarrow I_{2(s)} + HCl_{(aq)} + H_2O_{(l)}$, $\Delta H = -215kJ$
IV. $\frac{1}{2}H_{2(g)} + \frac{1}{2}I_{2(s)} + aq \longrightarrow HI_{(aq)}$, $\Delta H = -55kJ$
V. $H_{2(g)} + \frac{1}{2}O_{2(g)} \longrightarrow H_2O_{(l)}$, $\Delta H = -286kJ$

மேற்படி சக்தி மாற்றங்கள் தாக்கங்களில் குறிப்பிட்டுள்ள பீசமான மூல் எண்ணிக்கைகளில் தாக்கங்கள் நிகழும் போதானவை ஆகும்.

b) உமக்கு கீழ்வரும் வெப்ப இரசாயன தரவுகள் தரப்பட்டுள்ளன.
Mg(s) இன் நியம பதங்கமாதல் வெப்பவுள்ளுறை = $150kJ\ mol^{-1}$
Mg(s) இன் நியம முதலாம் அயனாக்க வெப்பவுள்ளுறை = $738kJ\ mol^{-1}$
$Cl_{2(g)}$ இன் நியம பிணைப்பு பிரிகை வெப்பவுள்ளுறை = $244kJ\ mol^{-1}$
$Cl_{(g)}$ இன் நியம இலத்திரன் ஏற்றல் வெப்பவுள்ளுறை = $-364\ kJ\ mol^{-1}$
$MgCl_{2(s)}$ இன் நியம தோன்றல் வெப்பவுள்ளுறை = $-639\ kJ\ mol^{-1}$
$Mg^{2+}{}_{(g)}$ இன் நியம நீரேற்றல் வெப்பவுள்ளுறை = $-1920\ kJ\ mol^{-1}$
$Cl^-{}_{(g)}$ இன் நியம நீரேற்றல் வெப்பவுள்ளுறை = $-365\ kJ\ mol^{-1}$
$MgCl_{2(s)}$ இன் நியம மூலர் கரைசல் வெப்பவுள்ளுறை = $-157kJ / mol^{-1}$
ஒரேயொரு வெப்பவிரசாயனச் சக்கரம் மூலம் Mg இன் நியம இரண்டாம் அயனாக்கல் .வெப்பவுள்ளுறையை காண்க?

c) (i) $O_{3(g)}$ ஆனது $NO_{(g)}$ உடன் ஒரு தனிப்படித் தாக்கத்தில் தாக்கம் புரிந்து $NO_{2\ (g)}$ ஐயும் $O_{2(g)}$ ஐயும் உண்டாக்குகின்றது. மேற்படி தாக்கம் சாத்தியமாவதற்காக உருவாக்கும். இடைநிலையையும், தாக்கிகள், விளைவுகள் ஆகியவற்றையும் குறித்துக்காட்டுவதற்கு சக்தி எதிர் தாக்கப்பாதை வரையை வரைந்து குறிக்க?

(ii) ஒரு இரசாயனத்தாக்கவீதத்தில் வெப்பநிலை அதிகரிக்க தாக்கவீதத்திற்கு யாது நிகழும் என இயன்றவரை பூரணமாகவும் தகுந்த வரைபின் உதவியுடனும் விளக்குக?

(iii) ஒரு உலோகத்திற்கும் அமிலத்திற்கும் இடையே நிகழும் தாக்கத்தின் தாக்க வீதத்தை அமிலச்செறிவு எவ்வாறு பாதிக்கிறது என்பதை அறிவதற்காக குறித்த நீளம்(3cm) உடைய Mg நாடாக்கள் வித்தியாசமான செறிவுகளை உடைய மிகை HCl கரைசல்களுடன் தாக்க விடப்பட்டு ஒவவொன்றிலும் $27^0C$ இலும் 1 வளி மண்டல அமுக்கத்திலும் 10ml ஐதரசன் வாயு வெளியேறுவதற்கு எடுக்கும் நேரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| $[HCl_{(aq)}$ $mol\ l^{-1}$ | 0.25 | 0.35 | 0.50 | 0.70 | 1.00 |
|---|---|---|---|---|---|
| நேரம் Sec | 144 | 72 | 36 | 18 | 9 |

a) HCl தொடர்பான தாக்க வரிசை யாது?
b) தாக்கத்தின் மொத்த வரிசை யாது?
c) இங்கு மிகை HCl பயன்படுவதன் நோக்கம் யாது?
d) இப்பரிசோதனையில் $1.0\ mol\ l^{-1}$ HCl இல் இருந்து $0.25mol\ l^{-1}$ கரைசலை எவ்வாறு தயாரிப்பீர் என சுருக்கமாக கூறுக?

# க.பொ.த.உயர்தர பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள் - 2006

## பகுதி C – கட்டுரை

8) (a)
(i) மூலகம் X ஓர் முதல் வரிசை d - குழுவைச் சேர்ந்தது. இது பூச்சியம் தவிர ஒரே ஒரு ஒட்சியேற்ற எண்ணை மட்டுமே கொண்டிருப்பதோடு பரகாந்த இயல்பற்றது. இதன் முழு இலத்திரன் நிலையமைப்பையும் பிரதான சக்தி மட்ட ஒழுங்கிற்கமைய $1S^2, 2S^2$ ........... எனும் வடிவில் தருக.
(ii) இதன் பூச்சியம் தவிர்ந்த மற்றய ஒட்சியேற்ற எண் யாது?
(i) வினா
(ii) இலுள்ள ஒட்சியேற்ற எண்ணிலுள்ள குறிப்பிட்ட மூலக நீர்க்கரைசல் ஒன்றில் இருந்து அக்கற்றயனின் இருக்கையை எவ்வாறு உறுதிப் படுத்துவீர்?

(b) (i) பின்வரும் ஒவ்வொரு மூலக்கூறிலுள்ள ஒவ்வொரு அணுவின் ஆகவும் வெளியோட்டு வலுவளவு இலத்திரன்களின் ஒழுங்கமைப்பைக் காட்டுவதற்கு புள்ளி – புள்ளடி வரிப்படங்களை வரைக.
$ICl_3, S_2Cl_2$
(ii) பின்வரும் இனங்கள் ஒவ்வொன்றினதும் வடிவங்களை கூறுக?
$ClO^-_3, IF_5$

(c) (i) **Pentaamminechlorocobalt( II ) Pentacyanonitrosylferrate( III )**
இனது IUPAC விதிகளுக்கமைந்த இரசாயனச் சூத்திரத்தை எழுதுக?
(ii) பின்வரும் சூத்திரத்தை உடைய சேர்வைக்கு IUPAC முறைக்கமைய பெயரிடுக.
$Fe_2[ Fe(CN)_6 ]$

(b) உலோகம் M இனது கரையும் உப்பு ஒன்றுடன் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.
(i) உப்பு நீரில் கரையும் போது ஒரு பச்சை நிறக்கரைசலைக் கொடுத்தது.
(ii) உப்பின் நீர்க்கரைசலுக்கு மிகை $NH_3$ சேர்க்கப்பட்ட போது ஒரு கடும் நீலக்கரைசல் பெறப்பட்டது.
(iii) மிகை செறி HCl இல் உப்பு கரைக்கப்பட்ட போது ஒரு மஞ்சள் கபி லக்கரைசல் பெறப்பட்டது.
(iv) (iii) இன் விளைவை நீரினால் ஐதாக்கி $NH_3$ ஆல் காரப்படுத்த பச்சை வீழ்படிவை கொடுத்தது.
M ஐ இனங்காண்க.
அத்துடன் மேலுள்ள ஒவ்வொரு அவதானிப்புக்கும் பொருத்தமான இரசாயனச் சமன்பாடுகளையும் எழுதுக?

(c) $Pb^{2+}, Cu^{2+}, Sn^{2+}$ கற்றயன்கள் அடங்கிய கரைசல் ஒன்றில் இருந்து மூன்று கற்றயன்களையும் வேறாக்கும் முறை ஒன்றை தந்து $Pb^{2+}, Cu^{2+}$ ஐ உறுதிப்படுத்தும். சோதனை ஒவ்வொன்றையும் தருக?
(d) $NH_3$ இல் மூலக்கூற்றிடை ஐதரசன் பிணைப்பு உண்டு. $I_2$ இல் மூலக்கூற்றிடை வந்தர்வால் கவர்ச்சி உண்டு. எனினும் அறை வெப்ப அமுக்கநிலையில் $NH_3$ வாயு அயடீன் திண்மம் இப்பௌதிக நிலை வேறுபாட்டை விளக்குக?

9) (a) (i) $I_2$ இன் தாழ்த்தும் தாக்கம்
(ii) $I_2$ இன் ஒட்சியேற்றும் தாக்கம்
(iii) $SO_3$ இன் ஒட்சியேற்றும் தாக்கம்
(iv) $SO_3$ இன் அமிலத்தாக்கம்
ஆகியஒவ்வொரு தொழிற்பாட்டையும் காட்டுவதற்கு ஒவ்வொரு சமப்படுத்திய சமன்பாடுதருக?

(b) (i) Nylon 6,6 எனும் பல்பகுதியத்தின் திரும்பத்திரும்ப வரும் அலகின் (repeat unit) கட்டமைப்பையும் இதன் ஒரு பகுதியங்களின் (mono mers) கட்டமைப்புக்களையும் வரைக?
(ii) புரதங்களில் மூலக்கூற்று நிறை குறைந்த புரதத்தின் திரும்பத்திரும்ப வரும் அலகின் கட்டமைப்பையும் அடிப்படை அலகின் கட்டமைப்பையும் அதன் IUPAC பெயரீட்டையும் தருக?
(iii) மேற்படி நைலோனிலும் புரதத்திலும் காணப்படும் ஒரு பொதுக் கூட்டத்தின் பெயரைத் தருக?
(iv) அப்பொதுக்கூட்டம் இருப்பதை உறுதிப்படுத்தும் இரசாயனச் சோதனையையும் அவதானத்தையும் தருக?
(v) இப்பொதுக்கூட்டம் காணப்படும் இன்னொரு சேர்வை யாது?

(c) மாணவன் ஒருவன் புவியோட்டில் காணப்படும் மக்னற்றைற் எனப்படும் இரும்பு ஒட்சைட்டில் 30g ஐ எடுத்து ஐதான $H_2SO_4$ இல் கரைத்து வடிதிரவத்தைப் பெற்று அதை 250ml ற்கு ஐதாக்கி ஏகவின கரைசலை பெற்றுக்கொண்டான். இதில் 25ml ஐ நியமிக்க $0.1mol\ dm^{-3}$, 20ml அமில $KMnO_4$ தேவைப்பட்டது. பின் புதிய 25ml கரைசலை எடுத்து தூய Fe ஐ மிகையாகச் சேர்த்து குலுக்கி வடித்து எஞ்சிய Fe அகற்றப்பட்டது. இதன் பின் இக்கரைசலை நியமிக்க $0.2mol\ dm^{-3}$ 40ml அமில $KMnO_4$ தேவைப்பட்டது.
(i) $MnO^-_4$ ற்கும் இடையிலான அமில ஊடகத்தில் நிகழும் தாக்கத்தின் சமப்படுத்திய முழு அயன் தாக்கத்தை தருக.
(ii) 25ml கரைசலில் உள்ள ஆரம்ப $Fe^{2+}$ மூல் யாது?
(iii) 25ml கரைசலில் உள்ள முழு Fe இன் மூல் யாது?
(iv) 250ml கரைசலில் உள்ள ஆரம்ப $Fe^{2+}$ மூல் யாது?
(v) 250ml கரைசலில் உள்ள முழு Fe இன் மூல் யாது?
(vi) 250ml கரைசலில் உள்ள $Fe^{3+}$ மூல் யாது?
(vii) 30g உள்ள FeO ன் திணிவு யாது?
(viii) 30g உள்ள $Fe_2O_3$ இன் திணிவு யாது?
(ix) 30g இல்உள்ள மொத்தஇரும்பு ஒட்சைட்டின் தூய்மையின் நூற்று வீதம் யாது?

10) (a) (i) பச்சை வீட்டு விளைவு என்றால் என்ன?
(ii) பச்சை இல்ல வாயுக்கள் 4 தருக?
(b) (i) நீர் மாசடையும் தோற்றுவாய்கள் 5 தருக?
(ii) நீர் மாசடைதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் 5 தருக?
(iii) நீரின் நிலையில் வன்மைக்கு காரணமான பிரதான அயன் யாது?
(iv) நீரின் நிலையுள் வன்மைக்கு காரணமான இரு கற்றயன்கள் யாவை?
(v) நிலையின் வன்மையை அகற்றும் வழிமுறைகள் 2 தருக?
(vi) நிலையுள் வன்மையை அகற்றும் வழிமுறைகள் 4 தருக?

(c) டொலமைற்றின் 7.36g எடுக்கப்பட்டு மாறா நிறை பெறப்படும் வரை நன்றாக வெப்பமேற்றிய போது வெளிவந்த $CO_2$ வாயுவின் கனவளவு நியம வெப்ப அமுக்கத்தில் 1.792 *l* ஆகக் காணப்பட்டது. எஞ்சிய மீதி 2mol $dm^{-3}$ $100cm^3$ HCl உடன் தாக்க விடப்பட்டது. எஞ்சிய HCl 1mol $dm^{-3}$ NaOH இனால் நடுநிலையாக்கப்பட்டது.
( சா. அ. தி ⇨ Ca = 40, Mg = 24, O =16 )
பின்வரும் வினாக்களுக்கு விடை தருக?
(i) $CaCO_3, MgCO_3$ இன் தனித்தனித்திணிவுகளை காண்க.
(ii) இறுதி நியமிப்புக்கு தேவைப்பட்ட NaOH இன் கனவளவை காண்க?


*( Best of luck for your future life )*


**ஆசிரியர்**
**By K.Sivathiran. B.Sc (Hons)**

03.04.2006 ஆம் திகதியின் தொடர்ச்சி...


# இரசாயனவியல் - I

(49) தரப்பட்ட சேதனச்சேர்வை M தொலனின் சோதனைப் பொருளுடன் வெள்ளியாடியைத் தரவில்லையாயினும் , பிராடியின் சோதனைப் பொருளுடன் செம்மஞ்சள் நிற தந்தது. அத்துடன் M , $Na_2CO_{3\,(aq)}$ உடன் வாயுக்குமிழிகளையும் உண்டாக்கி , $NaOH_{(aq)}$ உடன் கரையக்கூடியதாகவும் காணப்பட்டது. எனவே M யாது?

(1) 

(2) 

(3) $OHC - CH_2 - CH(OH) - CH_2COOH$

(4) 

(5) $CH_3 - CO - CH_2 - CH_2 - COOH$

(50) பின்வருவனவற்றில் நெல்சனின் நுண்துளைக் கலத்தில் NaOH தயாரிப்பின் பிரதான மூலப்பொருளும் , பக்க விளைவுகளும் முறையே
(1) $NH_4OH$ , $H_2$ , $Cl_2$
(2) NaCl , $H_2$ , $Cl_2$
(3) $NH_3$ , $H_2$ , $Cl_2$
(4) $Na_2CO_3$ , NaCl
(5) NaOCl , $Cl_2$ , $H_2$

(51) – (60) வரையானவற்றுக்கு I ம் கூற்று II ம் கூற்று தெரிவுகள்

| | I ம் கூற்று | II ம் கூற்று |
|---|---|---|
| (51) | சாறெண்ணைப் பிரித்தெடுத்தலில் கொதிநீராவி காய்ச்சி வடித்தல் பயன்படுகிறது. | இம்முறையில் சாரெண்ணெயின் கொதிநிலை குறைக்கப்படுகின்றது. |
| (52) | வெப்பநிலை அதிகரிக்கப்படும் போது வாயு மூலக்கூறுகளின் தாக்கவீதம் அதிகரிக்கும் | வெப்பநிலை அதிகரிக்க ஏவற்சக்தியிலும் கூடிய சக்தியைப் பெற்ற மூலக் கூறுகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. |
| (53) | கார ஊடகத்தில் $Mn^{2+}$ உள்ள கரைசலின் ஊடாக $H_2S_{(g)}$ செலுத்த MnS தோன்றாது | MnS இன் கரைதிறன் பெருக்கம் CuS ன் கரைதிறன் பெருக்கத்தை விட உயர்வாகும். |
| (54) | பென்சீனின் நைத்திரேற்றத்தை விட தொலுயினின் நைத்திரேற்றம் இலகுவானதல்ல. | $- CH_3$ கூட்டம் $e^n$ கவரும் கூட்டம் ஆகும். |
| (55) | 8 துணிக்கையை He அணுவுடன் ஒப்பிடலாம். | இரண்டிலும் ஒரே எண்ணிக்கையான புரோத்தன்கள் உண்டு. |
| (56) | $25^0$ C இல் நடுநிலைக் கரைசல் ஒன்றின் $P^H = 7$ ஆகும். | $25^0$ C இல் தூய நீரின் $K_w$ பெறுமானம் $1 X 10^{-14}$ mol $dm^{-3}$ ஆகும். |
| (57) | $CH_3COONa$ ன் நீர்க்கரைசல் நீலப்பாசிச் சாயத்தாளை சிவப்பு நிறமாக்கும். | $CH_3COONa$ முற்றாக கரையக்கூடியது. ( நீரில் ) |
| (58) | HCOOH தொலனின் சோதனைப் பொருளுடன் வெள்ளி ஆடியைத் தரும். | HCOOH இல் $-\overset{O}{\overset{\Vert}{C}}-OH$ கூட்டம் உண்டு |
| (59) | $PCl_3$ ஐயும் $BiCl_3$ ஐயும் வேறுபடுத்த நீரைப் பயன்படுத்தலாம். | $BiCl_3$ நீருடன் வெண்ணிற ↓ தரும். |
| (60) | $NH_3$ ஐ விட $CH_3NH_2$ ன் மூல இயல்பு உயர்வானது. | $NH_{3\,(g)}$ இல் H பிணைப்பு உண்டு. |

ஆசிரியர் : திரு.அ.லோகநாதன் B.Sc., P.G.D.E
யாழ். மத்திய கல்லூரி.